REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 355 கார்த்திகை 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை 20 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## நினைவேந்தலை நினைத்தும் பார்க்க முடியாது!

அரசு திட்டவட்டம் 19

# மாவீரர் நாள் நினைவேந்தலை தடுக்கப் பகீரதப் பிரயத்தனம்!

## கொரோனா: நால்வர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ.20

கொரோனா தொற்றால் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்று 19

## பரு. நீதிமன்றில் மனுத் தாக்கல்!

யாழ்ப்பாணம், நவ.20

பருத்தித்துறை நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தலை 18

## மல்லாகத்தில் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ.20

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் உட்பட காங்கேசன் 18

## மன்னார், வவுனியாவில் நினைவேந்தலுக்குத் தடை

கொழும்பு, நவ.20

நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளை கடைப்பிடிக்க, வவுனியா மற்றும் மன்னார் நீதிவான் நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 18

முச்சந்தி முரளி



"இப்பிடி அவை தடுக்கத் தடுக்கத்தான் நினைவேந்த வேணும் எண்ட ஓர்மம் கூடு மெண்டது அவைக்கு தெரியாது போல"

## விபத்தில் படுகாயமடைந்த 6 வயதுச் சிறுமி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.20

விபத்தில் சிக்கி காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த 6 வயதுச் சிறுமி சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். 18

## 437 பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.20

நாட்டில் கொரோனாத் தொற்றார்களாக மேலும் 437 பேர் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 19

## வீட்டு இறப்புகள் அதிகரிப்பு: அவதானம் என அறிவிப்பு

கொழும்பு, நவ.20

வீடுகளில் உள்ள வயோதிபர்கள் மற்றும் நீண்டகால நோயுள்ளவர்கள் ஏதேனும் உடல் அசௌகரியங்களை உணர்வார்களாயின் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று அறி 18

## சர்வதேசத்தை கையாளக் குழு!

கொழும்பு, நவ.20

"சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், மனித உரிமை வல்லுநர்கள் போன்றவர்களை உள்ளடங்கிய குழுவை நியமிக்கவுள்ளோம். அவர்கள் ஐக்கிய நாடுகள் 18

## கொரோனாவைக் காவும் பலர் நாட்டில் நடமாட்டம்

### பேராபத்து என எச்சரிக்கின்றது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, நவ.20

இலங்கையில் கொரோனா வைரஸ் உடம்பில் உள்ளவர்கள் இன்றும் வெளியில் சுற்றித் திரிகின்றார்கள். அவர்களை இனங்காண பி.சி.ஆர். பரிசோதனைகளை மூலைமுடுக்கெல்லாம் விஸ்தரிக்க வேண்டும். இல்லையேல் தற்போது நிலவும் பேராபத்து தொடரும் என்று வலியுறுத்தியுள்ளார் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே. 18

## பாடசாலைகள் திங்கள் ஆரம்பம்

கொழும்பு, நவ.20

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளைத் தவிர நாட்டில் ஏனைய பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கு மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை 18

## சா/த பரீட்சைத் திகதி: ஆய்வு செய்தே முடிவு

கொழும்பு, நவ.20

ஜனவரி மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் நேர அட்டவணை தொடர்பாக மறு ஆய்வு செய்யப்படும் என்று நேற்றுக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த இரு வாரங்களுக்கு இது தொடர்பில் மறு ஆய்வு நடத்தப் 19

## வடக்கு, கிழக்கால் நாட்டுக்கு கடனாம்!

கொழும்பு, நவ.20

வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவே அதிகளவு சர்வதேச கடன்களை வாங்க வேண்டியநிலை 16

## இறக்குமதி கட்டுப்பாட்டால் இலங்கை மீது அதிருப்தி!

கொழும்பு, நவ. 20

இறக்குமதி கட்டுப்பாடுகள் மூலம் உலக வர்த்தக நிறுவனத்தின் விதிமுறைகளை இலங்கை மீறுகின்றது என்று ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது. 17

## குடும்பப் பெண் தாக்கி இளம் குடும்பஸ்தர் சாவு

முல்லைத்தீவு, நவ.20

குடும்பப் பெண் ஒருவரின் தாக்குதலில் 19



சௌகரியமானதும் பாதுகாப்பானதுமான டிஜிட்டல் வங்கிச்சேவை

எமது டிஜிட்டல் வங்கிச்சேவைகளினூடாக உங்களுடைய பரிவர்த்தனைகளை பாதுகாப்பான மற்றும் சௌகரியமான முறையில் மேற்கொள்ளுங்கள்.

DFCC my SPACE — பண வைப்பு மற்றும் பண மீளப் பெறல்

DFCC Virtual Wallet — DFCC வேர்சுவல் வொலற்

DFCC iCONNECT — கொடுப்பனவு மற்றும் பண முகாமைத்துவ தீர்வு

DFCC PAY — QR மூலமான கொடுப்பனவுத் தீர்வு

DFCC இணைய வங்கிச்சேவை

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

DFCC வங்கி

ரூ. 208 மில்லியனில் அமைக்கப்பட்ட

# உள்ளக விளையாட்டரங்கு பல்கலையில் நேற்றுத் திறப்பு

**யாழ்ப்பாணம், நவ. 20**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டு அரங்கு நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.**



துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழாவுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்டமுன் மொழிவுக்கமைய 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தால் அடிக்கல் நடப்பட்டு நிறைவுசெய்யப்பட்ட கட்டடத் தொகுதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு திறப்பு விழா நிகழ்வு பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் இணைந்து உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைத்தனர்.

சுமார் ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந்திருக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு சர்வதேசத் தர நியமங்களுக்கமைய அமைக்கப்பட்டுள்ளது. பேராதனை மற்றும் ருகுண பல்கலைக்கழகங்களில் உள்ளக விளையாட்டரங்குகள் காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் வேறெந்தப் பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய வசதிகளைக் கொண்ட உள்ளக விளையாட்டரங்கு இதுவரை அமைக்கப்படவில்லை. சுமார் இருநூற்றி எட்டு மில்லியன் ரூபா செலவில் இந்த விளையாட்டரங்கு அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமல்லாமல், தேவைநாடும் சகலரும் இந்த உள்ளக விளையாட்டரங்கைப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து, அனுமதி பெற்று இங்குள்ள உள்ளக விளையாட்டு வசதிகளை விளையாட்டுத்துறை சார்ந்தோர் பயன்படுத்த முடியும்.

இதே நேரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கின் இடப்பற்றாக்குறை காரணமாகப் பல அமர்வுகளாக நடாத்தப்படும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை இம்முறை ஒரே நாளில் இந்த அரங்கில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கதாகும். (ஒ.20)

## சமைக்காத மீன் உடலுக்குக் கேடு

*சுட்டிக்காட்டும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்*

கொழும்பு, நவ.20
சமைக்காமல் பச்சை மீன் உட்கொள்வதால் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமைக்காமல் பச்சை மீனை உட்கொள்வது நல்லது என்று கூறி சிலர் தவறான செய்தியைப் பரப்புகிறார்கள். நன்கு சமைத்த மீன்களை உட்கொள்வதன் மூலம் கொரோனா பரவாது.

ஆனால் பச்சையாக உட்கொள்வதால் மீன்களின் தோலில் உள்ள பற்றீரியா மற்றும் நுண்ணுயிரிகள் செரிமான அமைப்பைக் கடுமையாகச் சேதப்படுத்தும். மீன் உட்கொள்ள வேண்டுமானால் மீன்களைக் கழுவி, சுத்தம் செய்து, சமைத்து உண்ணுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று அச்சத்தால் மீன் வாங்க மக்கள் அச்சம் கொண்டுள்ள நிலையில், மீன் வளத்துறை முன்னாள் அமைச்சர் திலிப் வெதஆரச்சி ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பச்சையாக மீனை உட்கொண்டு காண்பித்திருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையைத் தரப் பணிப்பு

கொழும்பு, நவ.20
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இதுவரை பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் அறிக்கையைப் பெற்றுத்தருமாறு சட்டமா அதிபர் கோரியுள்ளார் என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் இந்தக் கோரிக்கையை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவருக்கே விடுத்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கையைத் தயாரிப்பதற்காகவே அவர் இந்தச் சாட்சியங்களின் அறிக்கையைக் கோரியுள்ளார். (ற-இ)

## பிரதமர் மற்றும் அரச அதிபருக்கு ஆசிவேண்டி விஷேட வழிபாடு

மன்னார், நவ.20
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பிறந்த தினத்தை முன்னிட்டும், மன்னார் மாவட்டத்துக்கு புதிய அரசாங்க அதிபராகக் கடமையை ஏற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் அவர்களுக்கு ஆசி வேண்டியும் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நேற்று முன் தினம் மாலை விஷேட பூஜைகள் இடம்பெற்றதுடன் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினரால் புதிய அரசாங்க அதிபரை வரவேற்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை செயலாளரும் ஓய்வுநிலை எந்திரியுமான எஸ். எஸ். இராமகிருஷ்ணன், மன்னார் மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரதீப், மன்னார் கச்சேரி திட்டமிடல் பணிப்பாளர் மகேஸ்வரன் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். (ந-60,213)





## உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார்?

*எதிர்க்கட்சி திடீர் கேள்வி*

கொழும்பு, நவ. 20
ஈஸ்டர் தற்கொலை குண்டுதாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட பிரதான சூத்திரதாரி யார் ? இதனை ஏன் இன்னும் அரசால் கண்டுபிடிக்க முடியாதுள்ளது என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பினார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மத்திய வங்கி பிணைமுறி மோசடி, ஈஸ்டர் தற்கொலை குண்டுத்தாக்குதல் ஆகிய இரண்டையும் முன்னிலைப்படுத்தியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. கே.பியை கொண்டு வந்ததுபோல அர்ஜுன் மகேந்திரனையும் கொண்டுவருவோம் என சூளுரைத்தனர். ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திர தாரிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் மேற்படி பிரதான இரு உறுதிமொழிகளும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஈஸ்டர் தாக்குதலின் பின்புலத்தை ஆட்சியாளர்கள் கண்டுபிடிக்கவும் மாட்டார்கள். அதனால்தான் இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆணைக்குழு விசாரணையெல்லாம் வெறும் நாடகம்தான், என்றார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை வந்ததும் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். உரிய நடவடிக்கைகள் இடம்பெறும். எதிரணி பாதுகாத்து வைத்துள்ள சூத்திரதாரிகளும் தண்டிக்கப்படுவார்கள், என்றார். (ஒ,44)

# ஜனநாயக நாடென்றால் மாவீரர் நாளை அனுமதிக்குக

## சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை



**கொழும்பு, நவ. 20**
**இலங்கை ஜனநாயக நாடெனில், ஆயுதப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்காக அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி மலர் தூவி, தீபமேற்றி அஞ்சலி செலுத்துவதற்கு எவ்வித தடையும் ஏற்படுத்தப்படக் கூடாது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுறும் தருவாயில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச தற்போது பிரதமராகவும், பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகவும் பதவி வகிக்கின்ற சூழ்நிலையிலும் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப் பட்டுள்ளது.

எனினும், வடக்கு, கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை. போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டங்களும் இல்லை.

கல்வி, சுகாதாரம், விவசாயம், கடற்றொழில் மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய 5 அமைச்சுகளுக்கும் மொத்தமாக ஒதுக்கப்பட்ட நிதிக்கு சமனாக தனியொரு பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையானது ஒரு தீவு. பெரிய அச்சுறுத்தல்களும் இல்லை. அப்படி இருந்தும் எதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு நிதி ?

அதேவேளை, ஆயுதப்போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே மலர்தூவி, தீபமேற்றி அஞ்சலி செலுத்துவதற்கு ஜனநாயக நாடுகளில் அனுமதி வழங்கப்படும். இலங்கையும் ஜனநாயக நாடெனக் கூறப்படுகின்றது. அது உண்மையா என்பது எதிர்வரும் 27 ஆம் திகதி தெரியவரும்.

நினைவேந்தலுக்கு இடையூறு விளைவிக்கப்பட் டால் இலங்கையில் அடக்கி ஒடுக்கி ஆளப்படும் மன்னராட்சியே நிலவுகின்றது என்பது உறுதியாகும், என்றார். (ஒ.44)

# ஈ.பி.டி.பி., மக்கள் முன்னணி கூட்டு: தமிழ்க் கூட்டமைப்பு தோற்கடிப்பு

## நல்லூர் பிரதேச சபையில் இந்த நிலை

யாழ்ப்பாணம், நவ. 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் 11 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். 8 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர். ஒருவர் நடுநிலை வகித்தார்.

அதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 6 பேரும், பொ.ஐங்கரநேசன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்கள் இருவரும் என்று 8 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் ஐந்து பேர் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் என்று 8 பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

இருப்பினும் தவிசாளர் மீண்டும் ஒரு வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியும். அதுவும் தோற்கடிக்கப்பட்டால் தவிசாளர் பதவி விலகவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

# பேனா கொண்டு செல்லுங்கள்

## பொலிஸ் பேச்சாளர் கோரிக்கை

கொழும்பு, நவ.20
ஏதேனும் தேவைக்காக வீட்டிலிருந்து வெளியில் செல்லும்போது அனைவரும் பேனா ஒன்றை தம்வசம் கொண்டு சொல்லுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன கோரிக்கை விடுத் துள்ளார். அனைத்து வர்த்தக நிலையங்கள் மற்றும் இடங்களில் புதிதாக ஒருவர் செல்லும் போது தகவல்களைப் பதிவுசெய்து கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது வீட்டில் இருந்து பேனா ஒன்றை கொண்டு செல்வது இலகுவாக இருக்கும். உங்களுக்கு என்று ஒரு பேனா வைத்திருப்பது பாதுகாப்பானதாகவும் இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)



# ஹொரணவில் 5பேருக்கு தொற்று

கொழும்பு, நவ.20
ஹொரண சுகாதார வைத்திய அத்தியட்சகர் பிரிவில் 5 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் வெளிநாட்டில் இருந்து வந்த நபரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் கடந்த மாதம் 13ஆம் திகதி வெளிநாட்டில் இருந்து வந்த நபர் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு கடந்த மாதம் 25ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகியிருந்தது.

இதையடுத்து 14 நாள்கள் சிகிச்சையளிக்கப்பட்டு பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தாமல் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு மீண்டும் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்டார்.

இந்நிலையில் அவருக்கு மேற்கொண்ட சோதனையில் அவர் மீண்டும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதியாகியுள்ளது. (வ-இ)

# அரசின் தீர்மானத்துக்கு சஜித் தரப்பு பச்சைக்கொடி

கொழும்பு, நவ.20
விஷேட மருத்துவர் அனில் ஜாசிங்கவை கொரோனாத் தடுப்புக் குழுவுக்கு இணைத்துக் கொள்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு மதிப்பளிக்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எடுக்கும் சரியான தீர்மானங்களைப் பாராட்ட எதிர்க்கட்சி ஒருபோதும் தயங்குவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

# 'கோத்தா சேரின் உரையும் பெயில்'

## எதிர்க்கட்சிகள் தொடர் தாக்குதல்



கொழும்பு, நவ. 20
'சேர் பெயில்' (கோத்தா தோல்வி) என்று நாம் விமர்சித்து வந்தநிலையில், தனது தோல்வியை ஏற்றுக்கொண்டதாலேயே ஜனாதிபதி விசேட உரையாற்றினார். சேரின் அந்த உரையும் பெயில் என்றே கூறவேண்டும். இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுச நாணயக்கார மேற்கண்டவாறு சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள மக்களின் வாக்குகளாலேயே தனது வெற்றி சாத்தியமானது என ஜனாதிபதி மீண்டும் கூறியுள்ளார்.

ஆனால் 20 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

பௌத்த சபையுடன் ஆலோசனை நடத்தித் தேரர்களின் அனுமதியுடனேயே செயற்படுவதாகவும் குறிப்பிட் டார். ஆனால் 20 இல் உள்ள சில சரத்துகளுக்கு தேரர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

தொல்லியல் பெறுமதிமிக்க இடங்கள் பாதுகாக்கப்பட்டு எனவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

ஆனால் குருநாகலையில் தொல்லியல் பெறுமதிமிக்க பகுதியை இடித்த அரசியல் பிரமுகருக்கு வழங்கப் பட்ட தண்டனை என்ன? பொருள்கள் விலைகள் குறைக்கப்பட்டன என்று கூறினார். ஆனால் பருப்பு, செமன்ரின், அரிசி விலைகளுக்கு என்ன நடந்தது? ஒரு வாரம்கூட நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. இப்படி பல விடயங்களைக் குறிப்பிடலாம். தனது தோல்வியை ஒப்புக்கொண்டு சேர் உரையாற்றினார். அந்த உரைகூட தற்போது பொயிலாகி விட்டது, என்றார். (ஒ.44)

# '2024' ஆண்டு இறுதிக்குள் அனைவருக்கும் குடிதண்ணீர்

## பிரதமர் மகிந்த உறுதி

**கொழும்பு, நவ.20**

**2024ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனைவருக்கும் நீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**



களனி கங்கை - வலது கரை நீர் விநியோக திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இன்று அனைவருக்கும் தண்ணீர் வழங்கும் திட்டத்தை நாங்கள் தொடங்குகிறோம். அடுத்து முழு நாட்டு மக்களுக்கும் சுத்தமான குடிநீரை வழங்க விரும்புகிறோம். தற்போது நம் நாட்டில் சுமார் நாற்பது சதவீத மக்களுக்கு மட்டுமே குடிதண்ணீர் கிடைக்கிறது. ஐம்பத்து நான்கு சதவீதத்துக்கும் குறைவாக. ஆனால் 2021க்குள் முழு நாட்டு மக்களுக்கும் குடிதண்ணீரை வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். இவ்வாண்டு வரவு -செலவுத் திட்டத்தில் அதற்கென ரூபா ஆயிரம் பில்லியனை முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

இலங்கை முழுவதும் 40 ஆயிரம் கி.மீ நீர் குழாய்களை நிறுவுவ தற்கு உள்ளூர் பொறியியலாளர்களை நாங்கள் நியமிக்கிறோம். 2024ஆம் ஆண்டின் இறுதிக்குள், அனைவருக்கும் தண்ணீர் வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

---

## போதைப்பொருளுடன் அளம்பிலில் இருவர் கைது!

முல்லைத்தீவு -அளம்பில் பகுதியில் 10 கிராம் குடு போதைப்பொருளுடன் இருவர் நேற்றுமுன்தினம் காலை கைதுசெய்யப்பட்டனர். இந்தப் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

வேப்பங்குளம் -அடம்பன் மன்னாரைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும், உண்ணாப்பிலவு முல்லைத்தீவைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். சிறப்பு அதிரடிப்படையினர் இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (ற-19)

---

## கசிப்புடன் ஒருவர் கைது!

கொடிகாமம், நவ.20

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கரம்பைக்குறிச்சி வரணிப் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சரீர பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இதேவேளை இந்தப் பகுதியில் ஒரு கிராம் 700 மில்லிகிராம் கஞ்சாவுடன் நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு சரீர பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ற-159)

---

## கள்ள நோட்டுக் கும்பல் மதவாச்சியில் கைது

வவுனியா, நவ.20

கள்ள நோட்டுக்களுடன் தொடர்புடைய சட்டவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் மதவாச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிவித்தனர்.

அநுராதபுரம் மற்றும் வவுனியா பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் அவர்களைக் கைதுசெய்தனர். 3 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வெளிநாட்டுப் போலி நாணயதாள்கள் 200, அச்சிடும் இயந்திரம், 100டொலர் பெறுமதியான அமெரிக்க நாணயத்தாள்கள் மூன்று, மற்றும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பொலிஸ் மருத்துவர் எனத் தெரிவித்த பொலிஸார், அவரிடம் இருந்து வெவ்வேறு பெயர்களில் தயாரிக்கப்பட்ட ஏழு மருத்துவர்களின் றப்பர் முத்திரைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், ஊசி மருந்துகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவித்தனர்.

கள்ள நோட்டுக்களை வவுனியாவில் உள்ள நபர் ஒருவரிடம் கொடுத்து அமெரிக்க டொலர்களாக மாற்றுவதற்கு முயற்சித்த வேளையிலே மூவரும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொட்டகலை, அநுராதபுரம் மற்றும் மொனராகலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப)

---

## யாசகர் போல் ஆள்மாறாட்டம் பிடிபட்டால் கடும் நடவடிக்கை

### எச்சரிக்கிறார் அஜித் ரோஹன

கொழும்பு, நவ.20

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் யாசகர்களைப் போல ஆள்மாறாட்டம் செய்யும் நபர்களைக் கைது செய்ய விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அடையாளம் காணப்படும் நபர்கள்மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். அதேநேரம் சமிக்ஞைகள் மற்றும் சந்திகளில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் பயணிகள் யாசகம் பெறுபவர்களுக்கு எதையும் வழங்கக் கூடாது.

விற்பனையாளர்களிடமிருந்து எதையும் வாங்கக் கூடாது. அவ்வாறு ஈடுபடுபவர்கள் யாரும் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் தொடுக்கப்படுவதுடன், கடுமையான நடவடிக்கைகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் மேலும்

---

## அனைத்து வசதிகளுடன் புதிய சந்தை

கொழும்பு, நவ.20

பேலியகொட பிரதேசத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட புதிய சந்தையின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், இந்தப் புதிய சந்தை விரைவில் திறக்கப்படவுள்ளது.

இதில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளதுடன், விசாலமான வாகனத் தரிப்பிடம், ஊழியர்களுக்கான ஓய்வு அறைகள், குளிரூட்டல் அறைகள், வங்கி வசதிகள் உட்பட பல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ற-இ)

---

உயர்தரப் பரீட்சை

## மதிப்பீட்டுப் பணிகள் 25ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, நவ.20

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தப்பணிகள் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களைத் தவிர நாட்டின் ஏனைய மாவட்டங்களில் வைத்து விடைத்தாள் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட வுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (வ-இ)

---



## நாவற்குழி வீட்டுத்திட்டம் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம் - நாவற்குழி பகுதியில் மத்தியதர குடும்பங்களுக்கான 100 வீடுகளைக் கொண்ட வீட்டுத்திட்டத் தொகுதியை அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிட பொருள்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் "சியபத்த வீடமைப்பு" எனும் கருப்பொருளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் இந்த வீட்டுத் திட்டத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில், யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.உஷா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (வ-20)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஒரு நாடு இரண்டு பட்ஜெட்

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமென்பார்கள். தனியே ஒரு கடை மாத்திரம் இருந்தால் அந்தக் கடையில் என்ன பொருள் , எப்படிப்பட்ட தரத்தில் இருந்தாலும், என்ன விலை சொன்னாலும் வாங்கியே ஆகவேண்டும். ஏனெனில் வேறு தெரிவுகள் இல்லையே.

ஆனால் அந்தக் கடைக்குப் போட்டியாக இன்னொரு கடை வந்துவிட்டால் கதையே வேறு. இரு கடைகளும் வாடிக்கையாளர்களைத் தக்க வைப்பதற்காக, தரமான ஏராளமான பொருள்களை மலிவான விலையில் கொடுக்க முனைவதால் வாங்குவோருக்கு லாபமே. இந்த எதிர்க்கடை விவகாரம் ஒன்றுக்கொன்று எதிரான தரப்புகளிடமே நிலவுவதுண்டு. ஆனால் அதிசயங்கள் மலிந்த பூமியான இலங்கையில் ஒரே தரப்புக்குள்ளேயே, அதுவும் அண்ணன் தம்பிக்கிடையிலேயே ஏற்பட்டுள்ள ஏட்டிக்குப்போட்டியானநிலை பலரின்புருவங்களையும் உயரச் செய்துள்ளது.

அந்த அண்ணன் – தம்பி வேறு யாருமல்லர், எங்கள் பாசப்பறவைகளான ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த ஆகியோர் தான். கடந்த சில காலமாக இருவருக்குமிடையே இருந்த பனிப்போர் இப்போது வெளிப்படையாக வெடிக்கத் தொடங்கிவிட்டது.

வயது மூப்பின் காரணமாக பிரதமர் மஹிந்த உடலளவிலும், உள ரீதியாகவும் மிகத் தளர்ந்து விட்டார். பட்ஜெட்டை சமர்ப்பித்த போது வழக்கத்துக்கு மாறாக இரண்டு விடயங்கள் நடந்தேறின. பட்ஜெட்டை சமர்ப்பித்து பேசிய பிரதமர் மஹிந்த, இடைநடுவே தேநீர் இடை வேளை கேட்டதும், பின்னர் இருந்தபடியே பட்ஜெட்டை வாசித்து முடித்ததும் அவரது உடல், உளத் தளர்வையே காட்டுகின்றன. அதனால் அவரிடம் முந்தைய செயலூக்கமோ, ஆளுமையோ இல்லை எனக் கருதுகிறார் ஜனாதிபதி கோத்தாபய. இதனால்தான் கொரோனாவின் முதல் அலைக் காலத்தில் மஹிந்தவின் ஆளுகைக்குட்பட்ட, மத்திய வங்கியின் அதிகாரிகளை அழைத்து ஒரு பிடிபிடித்திருந்தார் கோத்தாபய. இப்போது மீண்டும் கோத்தாபய அதேபோல ஒரு வேலையைச் செய்து, மஹிந்த ஒரு ' டம்மிப் பீஸ்' என்று சொல்லாமல் சொல்லி இருக்கிறார்.

இந்தமுறை சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டில் எதுவுமேயில்லை என்று சகலரும் அரசைக் குறை சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். ஜனாதிபதி கோத்தாபய உள்ளடக்குமாறு கூறிய பல விடயங்கள் பட்ஜெட்டில் இடம்பெறவேயில்லை.அதனால்தான் பட்ஜெட் உப்பிச்சப்பில்லாத ஒன்றாக மாறிவிட்டது எனவும் , இது அரசுக்கு எதிரான போக்கை மக்களிடையே உருவாக்கக்கூடும் எனவும் கோத்தாபய தரப்பு கருதியது. அதனால் மஹிந்தவின் பட்ஜெட் உரை நிகழ்ந்த மறுதினமே, அதாவது நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கோத்தாபய , தானுமொரு பட்ஜெட் உரையை ஒத்த மிக நீண்ட அறிக்கையை ஊடகங்களில் தோன்றி வாசித்தார். இதில் தன்னை வெல்ல வைத்த சிங்கள மக்களுக்கு என்றும் விசுவாசமாக இருப்பேன் என்பதை மீண்டும் உறுதியாகக் கூறிய கோத்தாபய, பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய பல அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் இதில் சொல்லிச் சென்றார்.

ஆக, ஒரே அரசாங்கம் இருவேறு பட்ஜெட் உரைகளை வெளியிட்டிருக்கிறது. அரசுக்குள் இருக்கும் குழப்பங்களே இப்படி இரட்டைத்தனமாக வெளிப்பட்டுள்ளன. ஆனால் இந்த இரண்டில் எது அசல், எது போலி என்பதையோ அல்லது இரண்டுமே மக்களை ஏமாற்ற புனையப்பட்ட ராஜபக்சக்களின் வழக்கமான தந்திரமா என்பதையோ அடுத்து வரும் வருடம் தான் சொல்ல வேண்டும்.

# உழவர் சந்தையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடமாகாண முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கோரிக்கை



**யாழ்ப்பாணம், நவ.20**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில், உழவர் சந்தையை உருவாக்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
போருக்குப் பின்னர் எங்களுடைய மக்கள் பல்வேறு வகையிலும் துன்பப்படுகின்றனர். பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல பல்வேறு சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன. இதிலே மிக முக்கியமாக வடக்கு கிழக்கிலே எங்களுடைய விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு ஒவ்வொரு சந்தைகளிலும் பத்து வீத கழிவுகள் வாழங்கப்படுகின்றன. இது மிகவும் மோசமான நடவடிக்கை. இது உற்பத்தி செய்பவரை விட இடைத் தரகர்களும் ஏனைய வியாபாரிகளும் கொள்ளை இலாபம் பெறும் ஒரு நடவடிக்கை.
அவர்கள் என்ன நியாயம் சொன்னாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. இந்த விடயத்திலே சுமுகமாகத் தீர்வு காணப்பட வேண்டியவர்கள் விவசாயிகள் மாத்திரம் அல்ல. உள்ளூராட்சி மன்றங்களும், உள்ளூராட்சி மன்றங்களின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்நிற்கக்கூடிய மாகாண ஆளுநர், மாவட்டச் செயலர்கள், உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடைய பொறுப்பு. தம்புள்ளையில் இருந்து வரும் மரக்கறிகளுக்கு பத்து வீத கழிவு இல்லை . தம்புள்ளையில் இருந்து வந்தால் ஒரு நீதியும் எங்களுடைய விவசாயிகளுக்கு இன்னுமொரு நீதியுமா? இந்த நடைமுறையை உடனடியாக அமுல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு எடுக்கவில்லை என்றால் மக்கள் மிகப்பெரும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான போராட்டங்களுக்கு எங்களைத் தலைமைதாங்கும் நிலைக்கு தள்ளாதீர்கள் - என்றார். (ப-20)



# வீடமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நட்டார் பிரதமர்

கொழும்பு, நவ.20
மரதகஹமுல 'சியபத நிவாச' வீடமைப்புத் திட்டத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று முன்தினம் அடிக்கல் நடப்பட்டது.
சகல குடும்பத்தினருக்கும் தங்களுக்கானதொரு இல்லம் என்ற எண்ணக் கருவுக்கு அமைய செயற்படுத்தப்படும் இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் 100 வீடுகளைக் கொண்ட தொடர் மாடிக் குடியிருப்புகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.
அதற்கமைய 160 தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கும் வகையில் 16 ஆயிரம் வீடுகள் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்கப்படவுள்ளன.
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை, கட்டடப் பொருள் தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகாரசபை ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகிறமை குறிப்பிடத்தக்கது. (ப)

# நாடாளுமன்றத்துக்கு சென்ற கோத்தாபய

கொழும்பு, நவ. 20
ஜனாதிபதி கோத்தாபய நேற்று முற்பகல் நாடாளுமன்றத்துக்குச் சென்றார்.
2021 வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு குறித்த விவாதத்தின் இரண்டாவது நாள் நேற்று.
பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுடன் சபைக்கு வருகைதந்த ஜனாதிபதி அங்கிருந்து விவாதத்தை செவிமடுத்தார்.
புதிய நாடாளுமன்றத்தின் ஆரம்பக் கூட்டத் தொடரில் உரையாற்றிய பின்னர் ஜனாதிபதி சபைக்கு வருகை தந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (ஒ.இ)

# விபத்தில் இளைஞர் காயம்

சாவகச்சேரி,நவ.20
சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.
வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைச் சேர்ந்த இளைஞரே விபத்தில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-9)

## வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 2020

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."-*சார்ள்ஸ் டார்வின்*

# முதலீடுகளே தேவை; கடன்கள் வேண்டாம்

*சீனத் தூதுவரிடம் நேரில் கூறிய ஜனாதிபதி கோத்தா*

கொழும்பு, நவ. 20

**இலங்கை அதன் அபிவிருத்தி முயற்சிகளில் மேலும் வெளிநாட்டு கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக முதலீட்டை ஈர்ப்பதற்கே முன்னுரிமை அளித்துள்ளது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, சீனத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் புதிய தூதுவர் கியி சென்ஹோங் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தை கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து சீன தூதுவருடன் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வரும் பரஸ்பர நன்மையுடன் கூடிய நிலையான ஒத்துழைப்பு மற்றும் நட்புறவு குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

'குறிப்பாக பிரிவினைவாதத்துக்கு எதிரான போரில் வெற்றி பெற்ற பிறகு இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு சீனா பெரிதும் உதவியது. கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை ஆகியவை அவற்றில் சிலவாகும். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பை சிலர் விமர்சித்தனர். இந்தத் திட்டங்கள் பயனற்றவை என்பது அவர்களின் வாதம். உண்மை அதுவல்ல. சீனாவின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் அதிக வருமானம் மற்றும் தொழில்வாய்ப்பை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளன. எனது பதவிக்காலம் முடிவதற்குள் இந்த திட்டங்களின் மூலம் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக் கொள்வதே எனது நோக்கம்' என்று ஜனாதிபதி கூறினார்.

இலங்கை அதன் அபிவிருத்தி முயற்சிகளில் மேலும் வெளிநாட்டு கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக முதலீட்டை ஈர்ப்பதற்கே முன்னுரிமை அளித்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

'எமது நாட்டில் பரந்த முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன. விவசாயம், தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் கல்வித்துறை அவற்றில் முக்கியமானவை. இலங்கையின் மக்கள் தொகையில் சுமார் 30 வீதமானவர்களின் வாழ்வாதாரம் கிராமிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. கடந்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களாக சீனா அடைந்துள்ள கிராமிய அபிவிருத்தியை இலங்கையில் ஏற்படுத்தி கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எனது முக்கிய குறிக்கோள். அதைச் செய்ய எங்களுக்கு உதவுங்கள்' என்று ஜனாதிபதி, புதிய சீன தூதுவரிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சீனத் தூதுவர் கியி சென்ஹோங், இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி முயற்சிகளின் வெற்றிக்கு அதிகபட்ச பங்களிப்பை வழங்க தனது அரசு தயாராக உள்ளது எனத் தெரிவித்தார்.

'நீங்கள் பதவியேற்ற பிறகு, இலங்கை மக்களை ஒன்றிணைத்தீர்கள். மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் நாட்டை பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளீர்கள். கொவிட் 19 அச்சுறுத்தல் வந்தபோது, இலங்கை அரசும் மக்களும் அதை எவ்வாறு எதிர்கொண்டார்கள் என்பதை நாங்கள் கண்டோம்' என்று புதிய தூதுவர் கூறினார். இலங்கை வளமான நாடாக எழுந்திருப்பதை காண்பது சீனாவின் விருப்பமாகும் என்றும் அவர் கூறினார். (ஒ.இ)

## உவர் நீர் உள்வருவதைத் தடுக்க நிரந்தர தடுப்பணை வேண்டும்

*தேவன்பிட்டி கிராம மக்கள் கோரிக்கை*



மன்னார்,நவ.20

மன்னார் தேவன்பிட்டி கிராமத்தில் உப்பு நீர் கிராமத்துக்குள் வராமல் நிரந்தர தடுப்பு அணைகள் அமைத்துத் தாருங்கள் என்று அந்தப்பிரதேசமக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்த மக்கள் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் தேவன்பிட்டி கிராமத்தைப் பொறுத்த மட்டில் கடலோடு ஒட்டிய ஆறுகள் நிறைந்த பிரதேசமாக இருப்பதால் கடல் மற்றும் ஆறுகளின் நீர் மட்டம் உயரும் போது உப்பு நீர் கிராமத்துக்குள் உள்நுழைந்து பயிர், தாவரங்களை வளர்க்க முடியாமல் அவை பட்டுப் போகின்றன. குடிதண்ணீர்க் கிணறுகள் உப்பாகின்றன. பாடசாலை வளாகங்கள் சிறுவர் முன்பள்ளி நிலையங்கள், விளையாட்டு மைதா னங்கள் பாவிக்க முடியாதவாறு பாதிப்பை எமக்கு ஏற் படுத்திக் கொண்டிருக்கின்றன. உரிய அதிகாரிகள் மற் றும் அரசியல் பிரமுகர்கள் கவனம் எடுத்து உப்பு நீர் நிரந்தரமாக கிராமங்களுக்கு வராமல் தடுப்பணைகள் போட்டுத்தர வேண்டும். பாடசாலை மைதானங்கள் இளைஞர்களின் விளையாட்டு மைதானங்களையும் சீரமைப்புச் செய்து சிறப்பான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டு செல்ல உரியதரப்பினர் தேவன்பிட்டி கிராமத்து மக்களுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும் - என்றனர். (ப-213)

## முல்லை. நீதிமன்ற வழக்குகள் இன்றுமுதல் புதிய கட்டடத்தில்

முல்லைத்தீவு, நவ.20

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற புதிய நீதிமன்றத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததன் பிரகாரம் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்குரிய வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் இன்றுமுதல், முல்லைத்தீவு புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றில் நடைபெற்ற வழக்குகள் அனைத்தும் புதிதாக அமைக்கப்பட்ட மாங்குளம் புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மாதத்தின் 2 ஆவது மற்றும் நான்காவது புதன்கிழமைகளில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிர்வாகத் தெரிவு

கோண்டாவில், நவ.20

யாழ்ப்பாணம் - கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்றுமுன்தினம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக செ. செல்வராஜா, உப தலைவராக. த. தங்கதுரை, செயலாளராக.செ. உதயகுமார் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்களாக த. ரவிச்சந்திரன், க. கனகரத்தினம், ந.ஜெனிஸ்ரன், த. மோகனதாஸ், மோ. மன்றோ பவிரோஸ்ரலின் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-63)

## உத்தியோகத்தர் இடமாற்றம்; வவு. நகர சபையில குழப்பம்

வவுனியா, நவ.20

நகர சபையின் உத்தியோகத்தர் இடமாற்ற விவகாரத்தால் நேற்று வவுனியா நகரசபையில் அமளி துமளி ஏற்பட்டது.

வவுனியா நகரசபையின் அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் போது 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து சபையின் வழமையான அமர்வு நடைபெற்றது. நகர சபையின் செயலர் அரச உத்தியோகத்தர்களுடன் சபைக்குள் பிரவேசித்தார். நகரசபையில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தொடர்பில் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. செயலாளரிடம் விளக்கம் கோரப்பட்டது. இதனால் சபையின் செயலருக்கும், சில உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

செயலாளருக்கு ஆதரவாகவும் சில உறுப்பினர்கள் வாதங்களைத் தொடர்ந்தனர். சபையில் அரச உத்தியோகத்தர்களை அழைத்தமை தவறு என பல உறுப்பினர்கள் சுட்டிகாட்டியதுடன், இது ஒரு தவறான நடவடிக்கை என வலியுறுத்தினர். இதனையடுத்து அரச உத்தியோகத்தர்களை அங்கிருந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் நிர்வாக விடயங்களில் தலையீடு செய்ய வேண்டாம் என உறுப்பினர் ரி. கே.ராஜலிங்கம் தெரிவித்ததையடுத்து குறித்த விடயம் முடிவுக்கு வந்து சபை அமைதியானது. (ப- 18,ரி3)

## ஈழத் தமிழரின் விடிவுக்கு காத்திரமான தீர்மானத்தை இந்தியா எடுக்கவேண்டும்

*வலியுறுத்துகிறார் ஆனந்தன்*

வவுனியா, நவ. 19

சிங்கள பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உள்ள கோத்தா அரசு சீனா, அமெரிக்கா, இந்தியா அரசுகளின் பூகோள அரசியலுக்குள் சிக்கியுள்ள நிலையில் இந்திய அரசு ஈழத் தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு காத்திரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாதிட்டு 33 வருடங்கள் கடந்து விட்டன. தற்போதைய கோத்தாபய அரசு ஒரு தலைப்பட்சமாக அச் சர்வதேச ஒப்பந்தத்தை மீறும் வகையில் செயற்படுகின்றது. இதனை நடைமுறைப்படுத்தியிருந்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த அழிவுகளில் இருந்து காப்பாற்றியிருக்க முடியும். தற்போது சிங்கள பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பன்மையுடன் உள்ள இந்த அரசு சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற அரசுகளின் பூகோள அரசியலுக்குள் சிக்கியுள்ள நிலையில் இந்திய அரசு ஈழத் தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு காத்திரமான ஒரு நிலைப்பட்டை எடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் அரசியல் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் பலமான ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பவதன் மூலம் இந்தியாவுடனும், சர்வதேச நாடுகளுடனும் தமிழ் மக்களுக்கான பலமான இராஜதந்திர கட்டமைப்பை கட்டியெழுப்ப முடியும்.

போருக்குப் பின் கொண்டு வரப்பட்ட நல்லாட்சி அரசின் வரவு- செலவுத் திட்டமும் தற் போதைய அரசின் வரவு செலவுத் திட்டமும் வடக்கு கிழக்கு பகுதியில் போரால் அழிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிதி ஒதுக்கீட்டு செய்யவில்லை. மாறாக போர்க் காலத்தைப் போன்று இரட்டிப்பான நிதி பாதுகாப்பு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. போரால் பாதிப்டைந்த மக்களின் சொத்தழிவு, உயிரிழப்பு என்பவற்றுக்கு எந்தவிதமான நிதியும் ஒதுக்கப்பட வில்லை, என்றார். (ஒ.18)

# ஏழு மேலதிக வாக்குகளால் கரைச்சியின் பாதீடு வெற்றி

கிளிநொச்சி, நவ. 20

**கரைச்சி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 7 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

கரைச்சிப் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்துக்கான விசேட அமர்வு நேற்றுக்காலை 9.45 மணியளவில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் மண்மீட்பு போரில் மரணித்த மாவீரர்களை நினைவுகூர்ந்து அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

அதன்பின் தவிசாளரால் வரவு-செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றது. பின்னர் நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்புக்குச் சென்றபோது ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி சுயேட்சைக் குழுவில் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் என 20 பேர் வாக்களித்தனர்.

எதிராக சுயேட்சைக் குழு, ஈ.பி.டி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன வற்றைச் சேர்ந்த 13 உறுப்பினர்கள் வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் ஒருவரும் சுயேட்சைக் குழுவில் ஒருவரும் சபைக்கு இன்று சமூகமளிக்கவில்லை 7 மேலதிக வாக்குகளால் வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியது. (ப-35)

## கொடிகாமத்தில் 34 பேருக்கு பி.சி.ஆர் சோதனை

சாவகச்சேரி, நவ. 20



கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்துவோர் அங்கு பணியாற்றுவோர் மற்றும் பிரிவில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளவர்கள் என 34 பேருக்கு நேற்று எழுந்தமான பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஊடாகக் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்துவோர் மற்றும் அங்கு பணிபுரிவோர் ஆகியோருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்த வேண்டுமென சுகாதார மருத்துவ அதிகாரி விடுத்த பணிப்பை அடுத்து முதல்கட்டமாக நேற்று கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இந்தப் பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்பட்டன. மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (ப-9)

## மது போதைக்கு அடிமையானதால் அடகு வைக்கப்பட்ட மோ. சைக்கிள்

### தந்தையைத் தாக்கிய மகன் பொலிஸ் நிலையத்தில் சரண்

கிளிநொச்சி, நவ.20

மகனின் மோட்டார் சைக்கிளைத் திருடி அடகுவைத்து மது அருந்திய தந்தையை அவரது மகன் இரும்புக் கம்பிகொண்டு ஓட ஓடத் தாக்கிய சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மகன் வேலைக்குச் சென்றதைப் பயன்படுத்திக் கொண்ட தந்தை, மகனின் மோட்டார் சைக்கிளைத் திருடி 12 ஆயிரம் ரூபாவுக்கு அடகு வைத்து, அந்தப் பணத்தில் மது அருந்தியுள்ளார். வேலை முடிந்து வீடு திரும்பிய மகன் தனது மோட்டார் சைக்கிளைக் காணாது அதிர்ந்து போய் தேடிவந்த நிலையில் தனது மோட்டார் சைக்கிள் தந்தையால் அடகு வைத்ததை அறிந்துகொண்டார். இதனால் விரக்தி அடைந்த அவர் தந்தையை வீதியால் துரத்தித் துரத்தி கம்பியால் தாக்கினார். பலத்தகாயமடைந்த தந்தையை அயலவர்கள் தருமபுரம் மருத்துமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

தந்தையைத் தாக்கிய மகன் இரும்பு கம்பியுடன் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ப-113)

## உத்தேச பாதீட்டின் பிரதியை கிழித்த ஆளுங்கட்சி உறுப்பினர்


### சாவ. நகரசபையில் சம்பவம்

சாவகச்சேரி, நவ.20

நகர சபையின் உத்தேச பாதீட்டின் பிரதி, அமர்வு நடைபெற்ற வேளையில் ஆளுங்கட்சி உறுப்பினரால் கிழித்தெறியப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்ட வரைபின் பிரதி அனைத்து உறுப்பினர்களுக்கும்பணியாளர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. வரைபுகள் தொடர்பான விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட போது மிகஅவசியம் என மக்களால் சுட்டிக்காட்டப்பட்ட இரு வீதிகளை அடுத்த வருடம் சீரமைப்பது தொடர்பாக இரு வீதிகளை நீக்கி புதிதாக இரு வீதிகளை இணைப்பது தொடர்பான முன்மொழிவை உபதவிசாளர் சபையின் அனுமதிக்காகச் சமர்பித்தார்.

அவ்வேளையில் சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பாதீட்டில் குறிப்பிட்ட வீதிகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதால் முன்மொழிவினை ஏற்றுக் கொள்ள முடியாது எனக்கூறி வரைபின் பிரதியைக் கிழித்து எறிந்தார். இதனைப்பார்த்த எதிரணியின் உறுப்பினரும் தன்னிடமிருந்த பிரதியை மண்டபத்தில் தூக்கி வீசினார். இவ்வாறான நாகரீகமற்ற செயல் ஏனைய உறுப்பினர்களை முகம் சுழிக்கவைத்தது. (ப-9)



## ஆரியகுளம் துப்புரவு

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் உள்ள ஆரியகுளம் மாநகராட்சி மன்றத்தால் துப்புரவு செய்யப்பட்டது.

களத்தில் தேங்கிக் காணப்பட்ட பொலித்தீன் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டன.

மிதக்கும் படகு மூலம் மாநகர சுத்திகரிப்பு தொழிலாளர்கள் குளத்தில் நிரம்பிக் காணப்பட்ட கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். (ஐ-17)

# புத்த பகவானுக்குக் கோயில்கட்டி தமிழர் மனங்களைப் புண்படுத்தாதீர்

## சுரேஸ் பிறேமச்சந்திரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ.20

தமிழ் பேசும் மக்களின் காணிகளை அபகரித்து புத்த பகவானுக்கு கோயில்கட்டி சிறுபான்மை தேசிய இனங்களின் மனங்களைப் புண்ணாக்காதீர் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தமிழ் பேசும் மக்களின் நிரந்தர வாழிடங்களான வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாகப் பிரிக்கும் நோக்கில் திருகோணமலை மாவட்டத்தின் எல்லையில் உள்ள குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்குச் சொந்தமான காணிகளையும் பொதுக்காணிகளையும் அபகரித்து பௌத்த கோயில்களை அமைக்கும் பணியையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற கிராமங்களில் உள்ள காணிகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அபகரித்து மேற்கொள்ள முயற்சிக்கும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் கைவிட்டு சிறுபான்மை தேசிய இனங்களின் மகிழ்ச்சிக்கு வித்திடுமாறு கோருகின்றேன். அரசாங்கங்களின் இத்தகைய நடவடிக்கையானது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்குகிழக்கின் நிலத் தொடர்ச்சியை இல்லாமல் செய்து வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இரண்டு பகுதிகளாக மாற்றுவதற்கான முயற்சியே ஆகும். இதனூடாக தமிழ் மக்களின் இருப்பும் அடையாளமும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. நீதிமன்றங்களினூடாகப் பெற்றுக்கொள்ளப்படும் தற்காலிகத் தடை உத்தரவுகள் என்பது இவற்றுக்கான நிரந்தரத் தீர்வாக அமையாது. வடக்குகிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவை தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் இத்தகைய கபடத்தனமான சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் -என்றுள்ளது. (ப)

# மன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவரின் ஆதிக்கம்

## நடவடிக்கை எடுக்குமாறு பேசாலை மீனவர் கோரிக்கை

மன்னார்,நவ .20

**எமது கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய மீனவர்கள், எல்லை மீறிச் செயற்படுகிறார்கள் விரைவாக நடவடிக்கை எடுங்கள் என்று மன்னார் பேசாலை மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

தினமும் பெரும் எண்ணிக்கையிலான இந்திய இழுவைப்படகுகள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து வலைகளைச் சேதப்படுத்தியும், வெட்டியும் கொண்டு செல்கின்றனர். நேற்றுமுன்தினம் மட்டும் நெடுந்தீவு, கச்சதீவு உட்பட மன்னார் கடற்பரப்புகளை முன்னூறுக்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் ஆக்கிரமித்து எமது கடல் வளங்களை சூறையாடிச் சென்றுள்ளன. இலங்கை அரசு இதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இனி மேல் நாங்கள் பொறுமை காக்கப் போவதில்லை.

கொரோனாவைக் காரணம் காட்டி இந்திய மீனவர்களின் அருகில் செல்ல வேண்டாம் என்று கடற்படையினர் கூறுகின்றனர். நாங்கள் இங்கு பாதிக்கப்படும்பொழுது அரசாங்கம் கொரோனாவைச் சாட்டி இந்திய மீனவர்களை உழைக்க விட்டுக் கொண்டிருக்கிறது. நாங்களும் நடவடிக்கை எடுப்பதில்லை. அரசாங்கமும் நடவடிக்கை எடுப்பதில்லை. இந்திய றோலர் சம்பந்தமாக அரசு விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு எமது மக்கள் பிரதிநிதிகள் விரைவாக அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றனர். (ப-213)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், நவ.20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 9 மணியில் இருந்து மதியம் 12 மணி வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்கட்டு, கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டித்தெரு வரை, இலந்தைக்குளம்,புங்கன்குளம்,முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு,கல்வியங்காட்டு சந்தி,கிளிகடைச் சந்தி,நல்லூர் பூங்கனிச்சோலை, இராமலிங்கம் சந்தி, ஆடியபாதம் வீதி,இராஜ வீதியிலிருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் வரை, சட்டநாதர் வீதி, நல்லூர் கோவில் வீதியின் ஒரு பகுதி, சிவன் அம்மன் வீதியின் ஒரு பகுதி, நல்லூர் மாநகர சபை அலுவலகம்,நல்லூர் செம்மணி வீதி வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம்,எஸ்.ஓ.எஸ் சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



100,000 வேலைவாய்ப்பு

## பயனாளிகளுக்கு பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.20

மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஒரு லட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியுள்ளது. அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்குத் திட்டத்தின் ஒரு பயிற்சிக் கட்டமாக தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் முக்கிய பயிற்சியாக, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் தெரிவுசெய்ப்பட்டவர்களுக்கான 25 தொழில் துறைகளில் 6 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்.

அதன்படி, இந்தப் பயிற்சிக்கு முன்னர், முதல் இரண்டு வாரங்களுக்கு இந்தத் தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தால் 34 ஆயிரத்து 818 பேர் தெரிவு செய்யப்படுவர். தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் தேசிய இளைஞர் படையணி என்பன இணைந்து இந்தப் பயிற்சித் திட்டத்தை, ஏற்பாடு செய்யும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான இந்தப் பயிற்சித் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. அத்தோடு, எதிர்காலத்தில் ஏனைய பிரதேசங்களில் பயிற்சித் திட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என நைற்றாவின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சந்தையைச் சுற்றி வெள்ளம்; வியாபாரிகள்,மக்கள் சிரமம்

### மருதனார்மடத்தில் அவலம்

வலி.தென்மேற்கு, நவ.20

வலி.தெற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள மருதனார்மடம் சந்தை வளாகத்தைச் சுற்றி மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் வியாபாரிகள் மட்டுமல்ல பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள். சந்தையை நாடிவரும் அனைவரும் வெள்ளத்தைத் தாண்டி உள்ளே செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் உள்ள பிரபல்யமான சந்தைகளில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மருதனார்மடம் சந்தையும் ஒன்றாகும். தினசரி இயங்கிவரும் இச் சந்தையில் நூற்றுக்கு மேற்பட்ட வியாபாரிகள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றார்கள். இதேவேளை சந்தைக் கட்டடத் தொகுதியில் பல வர்த்தக நிலையங்களும் இயங்கி வருகின்றன. கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையால் சந்தை வளாகத்தைச் சுற்றி மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் அயல் கிராமங்க ளிலிருந்து தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக சந்தையை நாடிவரும் வியாபாரிகளும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள். இந்த நிலை குறித்து விசனம் தெரிவித்துள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் சிரமமின்றி சந்தைக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர். (ஐ-115)

## எரி கொட்டகை சேதம்: சீரமைக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, நவ.20

அளவெட்டி பனங்கொட்டு இந்து மயானத்தில் உள்ள எரி கொட்டகை சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. இந்த நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள மக்கள் மழை காலம் ஆரம்பமாகி உள்ளதால் எரி கொட்டகையைத் திருத்தி அமைக்குமாறு பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர்.

வலி.வடக்கு பிரதேசத்தில் உள்ள இந்து மயானங்களில் அளவெட்டி பனங்கொட்டு இந்து மயானமும் ஒன்றாகும்.இந்த மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள எரி கொட்டகையின் கூரைத்தகடுகள் சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் தாமதம் ஏற்படுகின்றது. எனவே சடலங்களை சிரமமின்றித் தகனம் செய்வதற்கு வசதியாக எரி கொட்டகையைத் திருத்தி அமைக்குமாறு மக்கள் பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர். (ஐ-115)

## செய்தியைப் பிரசுரிக்க வேண்டாமாம்!

வவுனியா, நவ.20

சபையில் பணிபுரியும் ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பாக இடம் பெற்ற வாக்குவாதத்தில் சபை உத்தியோகத்தர்களை சபை அமர்வுக்குள் அழைத்த வவுனியா நகர சபையின் செயலாளர் இது தொடர்பான செய்தியைப் பிரசுரிக்க வேண்டாம் என்று ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்தார்.

வவுனியா நகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. நகரசபையில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலரது இடமாற்றம் மற்றும் சம்பள விடயங்கள் தொடர்பாக உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போது சபையின் செயலாளர் குறித்த ஊழியர்களின் விடயம் தொடர்பான தெளிவுபடுத்தல்களை முன்வைத்தார். சபையில் பணிபுரியும் எட்டுக்கும் மேற்பட்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்களை சபை அமர்வுக்குள் அழைத்து, கருத்துக்களை முன்வைத்தார்.

தாம் அனைவரும் இடமாற்றலாகிச் செல்லவேண்டி வரும் என்றும் எச்சரித்திருந்தார். தமது பக்க நியாயத்தை நிரூபிப்பதற்காகவே உத்தியோகத்தர்களை சபைக்குள் அழைத்ததாகச் செயலாளர் தெரிவித்தார். அத்தோடு உத்தியோகத்தர்கள் வருகைதந்த விடயத்தை செய்திகளில் பிரசுரிக்க வேண்டாம் என்று ஊடகவியலாளர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். சபையிடமோ, தவிசாளரிடமோ அனுமதி பெறாமல் உத்தியோகத்தர்களை உள்ளே அழைத்தமை உள்ளூராட்சி அமைப்பின் விதிமுறைகளை மீறும் செயற்பாடாகவே இருக்கிறது எனப் பலரும் இதன் போது விசனம் தெரிவித்தனர். (ப-ரி3)

# தரம் 5 புலமைப்பரீட்சை பெறுபேறுகள்

**கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவு களில் பாடசாலை ரீதியாகக் கிடைத்த பெறுபேறுகள்:-**

### யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

க.தரணிகா-191, மோ.சியாந் - 182, பி.பிர ணுஷா - 177, சி.சானுகா - 168, ச.ஜர்மினா-165, கா.தீப்தி-161, பு.யருசன் - 161

### மன்.பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலயம்

நி.டெரிங்டன் டபேரோ - 189, றொ.இவோன்சா மிராண்டா - 184 , ரீ. க.யூட் டாரியோ லியோன் -179, நி.டிவான்சன் சோசை - 178, மி.இனோக் ஷன் பெர்னாண்டோ-176, கி.மதுஷன் பெர் னாண்டோ-173, ரா.சுகிர்தா - 172, பா.எப்சி லேயா - 170, சு.அதிர்ஷன் குரூஸ் - 170, ச.சஸ் விக்கா - 169, ம.விகாஷன் பெர்னாண்டோ - 168, நீ.ஹரிஸ்ரன் குரூஸ் -168, பெ.விஹா சினி பச்சேக் - 168, தே.மெரின் ஷனாமிக்கா - 167, நி.நிவோன்சன் குரூஸ் - 167, த.ஆன் நிசாலி டலிமா - 166, கி.லுவான்சி குலாஸ் - 166, ஜெ.அபிஸ்ரன் - 164, சி.பவதாரனி - 163, றொ.ஆகாஷ் - 162, பே.ஜொன்சியா - 162, ஜி.எப்சிபா - 161, த.அஸ்விக்கா டலிமா 161, ஜொ.மேரி அனஸ்ஹா - 160, வி.ஆன்ரியா குரூஸ் - 160, ரா.டில்ரூபின்சன் - 158, க. லியானா - 158 (ஐ-56)

### யா/பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை

பு.பிரியந்தன் - 179, ஜெ.தனுஸ்கா - 178,நி. கிறிஸ்ரியா - 175, தே.நிதுர்ஷனா - 163, க.திவானுஜா - 163, ஆ.அனஸ்ரியன் - 162

### கிளி/கரியாலை நாகபடுவான் இல.2 அ.த.க.பாடசாலை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிளி/கரி யாலை நாகபடுவான் இல. - 02 அ.த.க. பாட சாலையில் மாணவர் ஒருவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளார்.

பாடசாலையில் 16 மாணவர் தோற்றிய நிலை யில் 15 மாணவர்கள் 70 புள்ளிக்கு மேலும் 10 மாணவர்கள் 100 புள்ளிக்கு மேலும் பெற்றுள் ளனர்.

இதில் செ.மதுசாளினி என்ற மாணவி வெட்டுப் புள்ளிக்கு மேல் 165 புள்ளி எடுத்து பாட சாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (ஐ)

### கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்

மு.மதுரிகா - 186

பாடசாலையில் இருந்து பரீட்சைக்கு 24 மாணவர்கள் தோற்றிய நிலையில் 8 பேர் 100 புள்ளிகளுக்கு மேலும், ஒருவர் வெட்டுப் புள்ளிக்கு மேலும் எடுத்து சித்திபெற்றுள்ளனர்.

### கிளி/ வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை

இ.துஜீபன்-177 ,ச.நிபோசன்- 172 ,சி.பிரியன் -167 ,சு.திபிகா-160

பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றிய 21 மாணவர்களில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 4 மாணவர்களும் 100 புள்ளிக்கு மேல் 14 மாண வர்களும் 70 புள்ளிக்கு மேல் 3 மாணவர்களும் பெற்றுள்ளனர். (ஐ-9)

### யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

நி.கஜானன் - 168,சி.சகானா - 166, தெ. தேனுகா - 163, ம.அர்ச்சனா - 163

### யா/பெரியவிளான் றோ.க.த.க. பாடசாலை

பு.பிரியந்தன் - 179, ஜெ.தனுஸ்கா - 178, நி.கிறிஸ்ரியா - 175, தே.நிதுர்ஷனா - 163, க.திவா னுஜா - 163,ஆ.அனஸ்ரியன் - 162

### முல்லைத்தீவு மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்

கி. அக்ஷயன் - 191, கா.அக்சயன்-185, ச.அஸ் வரியா-181, வ.அபிநயன்-178, ர.சிறிப்பிரியன் -171 ,ஸ்ரீ தர்மிகா - 161

### யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

நி.கஜானன் - 168,சி.சகானா - 166, தெ. தேனுகா - 163, ம.அர்ச்சனா - 163

### கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்

குகேந்திரராசா சன்சிகா - 183, தயாளுபன் சண்முகேஸ் - 172, செல்வரத்தினம் மதுஷன் - 170, கிருஸ்ணானந்தன் கனிஸ்ரா - 167 , பிரதீபன் பிரசாளினி - 161

### வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

உதயன் கிஷாந் - 194, புஸ்பராஜா கிஷாயினி - 188, பகிரதன் சுபிரன் - 186, ஞானகுமார் பவின்திரா - 186, கேசவன் தேவ்யா - 184, ஞானகரன் தர்ஷிகா - 182, மதனகுமார் லிந் திகா - 179, செல்வரத்னம் ஆருக்ஷன் - 178, யோகராசா திலக்ஷன் - 177, தவகுமாரன் திவ் யன் - 177, பிரசன்னா கபிஷ்தன் - 176, ஜெய சுதன் அட்சயன் - 174, சுதர்சன் திருக்குமரன் - 174, கமலாகரன் சானுஜா - 174, மதியழகன் சுஜனி - 173, திஷாகரன் லக் ஷ்மிகா - 173, ஞானகுமார் பவின்தனா - 173, நகுலேஸ்வரன் சிவாஸ்ஜினி - 171, பேரின்ப நாதன் விகிர்திகா - 171, ஜெகதீஸ்வரன் லிதுரங் கன் - 170, ராஜாராம் திவ்யன் - 170 சுரேஸ் குமார் சேயோன் - 169, கோகுலவாசன் அக் ஷயா - 168, கிருபாகரன் டிராகவன்-168, ஜாதவன் அனுஜா - 168, மோகன் சாத்வீகா - 168, சுந்தரலதன் கிதுஜன்- 167, பரனிதரன் சமர்திகா - 167, சுரேந்திரன் லக்மிடன் - 165,நிஷாந்தன் அக்ஷயா - 163, நகுலேஸ்வரன் கபிஷ்னா - 162, மகிழதாஸ் கொனிஷா - 162, ஸ்ரீவசந்தன் தருன் - 160, ஸ்ரீபரதீப் சுவஷ்திகா - 160,

### சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்

மயூரன் லக்ஸ்மிதா - 176 , பிரதீபன் பிரதீஸ் -174, குகதர்சன் பிரவீண் - 161.

## மாணவர்கள் கௌரவிப்பு



சாவகச்சேரி, நவ.20

சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயத்தில் கடந்த 15 வருடங்களின் பின்னர் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் சித்திபெற்றுள்ளார்.

சித்திபெற்ற இராகுலன் சாருகன் என்ற மாணவன் மற்றும் அவருக்கு கற்பித்த ஆசிரியர் தயாபரன் சுதாமதி ஆகியோர் சாவகச்சேரி லயன்ஸ் கழக கத் தால் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டார்.

கழகத் தலைவர் லயன் இ.கோகுலன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற மதிப்பளிப்பு நிகழ் வில் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.(ஐ-9)

மன்னார்.நவ.20

வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மடு கல்வி வலயத்தில் அதிகூடிய புள்ளியைப் பெற்று சாதனை படைத்த மாணவி நேற்றுமுன்தி னம் கௌரவிக்கப்பட்டார்.

மடு கல்வி வலயத்தில் ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி விக்ரர் சாள்ஸ் பிரதிக்சா தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளை பெற்றுள்ளார்.

குறித்த மாணவிக்கு மடு வலயக்கல்வி பணிப்பாளர் கே.சத்தியபாலன் பதக்கம் மற்றும் பரிசில் வழங்கி கௌரவித்தார்.

நிகழ்வில் மடு வலயக்கல்வித் திணைக்கள அதிகா ரிகள், பாடசாலை அதிபர்,ஆசிரியர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-56)



## கிளிநொச்சி மாவட்டத்தில் 406 மாணவர்கள் சித்தி

கிளிநொச்சி,நவ.20

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் கிளிநொச்சி மாவட்டத்தில் 406 மாணவர்கள் வெட்டுப்புள் ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள் ளனர்.

இந்த வருடம் பரீட்சைக்கு மாவட் டத்தில் இருந்து 2 ஆயிரத்து 503 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் 70 புள்ளிக்கு மேல் 2 ஆயிரத்து 189 மாணவர்கள், 100 புள்ளிக்கு மேல் ஆயிரத்து 699 மாணவர்களும், 160 புள்ளிக்கு மேல் 406 மாணவர்களும் பெற் றுக்கொண்டனர்.

இதில் கிளிநொச்சி மகா வித்தியா லயத்தில் 75 மாணவர்கள் வெட் டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ள னர். இதுவே மாவட்டத்தில் அதிக மாணவர்கள் சித்திபெற்ற பாடசா லையாக காணப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி மாவட் டத்தில் தர்மபுரம் இல 1 பாடசாலை யைச் சேர்ந்த இரவீந்திரன் நிது சன் 195 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் நிலையில் உள்ளார். (ஐ-214)

# ஈ.பி.ஆர்.எல்.எப்.- சு.கட்சி கூட்டில் வவு. நகரசபையின் பாதீடு வெற்றி



வவுனியா, நவ.20
தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் கூட்டில் உள்ள வவுனியா நகர சபையின் 2021ஆம் ஆண்டு பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட் டுள்ளது.

வவுனியா நகரசபையின் பாதீடு தொடர்பான அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

இதன்போது சபை தவிசாளரால் சபையில் வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. இதனை ஆதரித்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் லரீப் முன்மொழிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஜக்கரியாஸ் சலின்டன் வழிமொழிந்தார்.

இதனை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஈபிடிபி ஆகிய கட்சிகளின் 19 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பி.யானுஜன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் பாஸ்கரன் ஜெயவதனி ஆகி யோர் வரவு செலவுத் திட்டம் நிறைவேறிய பின்னர் சபைக்குச் சமூகமளித்தனர். (ப-18)

## போதையில் சாரத்தியம் ரூபா 2 இலட்சம் தண்டம்

சாவகச்சேரி, நவம்.20
போக்குவரத்து விதிமுறை களை மீறி மது போதையில் வாகனம் செலுத்திய எட்டுப் பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தண்டம் விதித்துள்ளது.

இவர்களுக்கு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இந்த தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஆறு பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டு, சாரதி அனுமதிப்பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை இவர்கள் தமது தொழில்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் தேவை என சட்டத்தரணி மூலம் கோரியதால் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபாவும், இன்னொருவருக்கு 29 ஆயிரம் ரூபாவும், மற்றொருவருக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டு அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. (ற-9)

## ட்ரோன் கமரா மூலம் இதுவரை 117 பேர் கைது

கொழும்பு, நவ.20
ட்ரோன் கருவிகள் ஊடான கண்காணிப்பின் மூலம், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 117 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன நேற்றுமுன்தினம் தெரிவித்தார். மேலும் முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பின்பற்றாமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ட்ரோன் மூலமான கண்காணிப்பு பெருமளவில் வெற்றியளித்துள்ளது. தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுவோரைக் கைதுசெய்வதற்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் புலனாய்வு அமைப்புக்கள் மூலம் விசேட நடவடிக்கை அமுல் படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நபர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-ரி4)

## விபத்தில் மூவர் காயம்!



வவுனியா,நவ.20
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்த நிலையில் நேற்று மதியம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஓமந்தைப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்த கன்ரர் ரக வாகனம் தாண்டிக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் கன்ரர் வாகனத்தில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் விபத்துக்குள்ளான கன்ரர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி அதில் பயணித்த நபர் ஒருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (ற-ரி3)

## அடிப்படைச் சம்பளமாக ரூ.1000 வழங்க வேண்டும்

### எம்.பி. இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு.நவ. 20
தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பள உயர்வு அடிப்படைச் சம்பளத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் 7 பேர்ச் காணியை தோட்ட மக்களுக்கு வழங்கியது. வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டன. இம்முறை வரவு- செலவுத்திட்டத்தில், முழு நாட்டுக்குமான வீடமைப்புத் திட்டம் பற்றி பேசப்பட்டது.

1,000 ரூபா சம்பள உயர்வு பற்றி பேசப்பட்டது. ஆயிரம் ரூபா கொடுத்தால் நாங்கள் வரவேற்போம் . அதுவும் அடிப்படைச் சம்பளத்தில் அதிகரிக்கப்படவேண்டும். தோட்டத் தொழிலார்களுக்கான 1,000 ரூபா முன்மொழிவு 2015ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட யோசனையாகும். 1,000 ரூபா தொடர்பில் 22 கம்பனிகளுடன் பேச்சு நடத்தவேண்டும். அதன்பின்னர் தான் அது தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (வ-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** வீட்டை சீர்செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சமூகத்தில் மரியாதை கூடும். சகோதர வகையில் சிறு நன்மை உண்டு.

**இடபம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பெரியோருக்கு நன்மை செய்து ஆசி பெறுவீர்கள். எதிலும் ஏற்றம் பெறு வீர்கள். சில சோதனைகள் நேரலாம்.

**மிதுனம்:** வெளிவட்டாரத் தொடர்பு விரும்பும் விதத்தில் அமையும். முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். பேச்சில் கவனம் தேவை.

**கடகம்:** மற்றவர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். நிம்மதி மீளும். சொத்து விஷயத்தில் மனைவி வழியில் பக்கபலமாக இருப்பார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். நல்ல செய்தி வரும்.

**சிம்மம்:** புதிய சலுகைகள் கிடைக்கும். தம்பதியர்களின் சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். கோபத்தை குறைப்பது நல்லது. நண்பர்களுக்காகச் செலவிடுவீர்கள்.

**கன்னி:** உறவினர் உதவிகரமாக நடந்து கொள்வர். மனதில் நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேறும். தாராள பணவரவில் சுபச்செலவு செய்வீர்கள்.

**துலாம்:** எந்த விஷயத்திலும் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். மற்றவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். செயல்களில் கவனம் தேவை. குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள்.

**விருச்சிகம்:** கடந்த கால வேண்டுதல்களை நிறைவேற்றுவீர்கள். போட்டிகள் குறையும். சக ஊழியர்க ளால் ஆதாயம் உண்டு. சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:** பிரபலங்களின் நட்பு கிடைத்தால் அதிக உரிமை எடுக்காதீர்கள். சுய முயற்சியால் வெற்றி பெறும் நாள். இனிய சந்திப்பு நிகழும். வீட்டுக்கு தேவையானவை வாங்குவீர்கள்.

**மகரம்:** அனுபவசாலியின் உதவியால் சிலயுக்திகள் கற்பீர்கள். புதியவர்களின் நட்பால் ஆதாயம் எதிர்பாக்க முடியாது. பணவரவு திருப்திகரமாக இருப்பதால் சேமிப்பு கூடும்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் ஏற்பட்ட வாக்குவாதம் சமாதானமாகும். ஓய்வின்றிப் பணியாற்றி நிறைவாய்ப் பணியை முடிப்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தள்ளிப் போனபணிகள் முடியும். வீட்டில் தடைகள் அகலும். எதிரிகள் விலகுவர். புதியவர்களிடம் கவனமாக இருங்கள்.

# முறிந்து விழும் நிலையில் மரங்கள்; அகற்றுகிறது மரக்கூட்டுத்தாபனம்




முல்லைத்தீவு, நவ. 20

முறிந்து விழும் நிலையில், முல்லைத்தீவில்-வீதியோரங்களில் காணப்பட்ட மரங்களை அகற்றும் பணியில் அரச மரக்கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

முல்லைத்தீவில், அண்மை நாள்களாக் கனமழை பொழிவதோடு காற்றும் வேகமாக வீசுகின்றது. இதனால் மரங்கள் முறிந்து வீழ்ந்து வீதியால் பயணிக்கின்றவர்கள் காயமடைகின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக இரண்டரை மாதங்களுக்கு முன்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறு வீதி ஓரத்தில் இருந்த மரமொன்று கடும் காற்று மற்றும் மழை காரணமாகச் சரிந்து வீழ்ந்ததில் வீதியால் பயணித்த இருவர் உயிரிழந்த சம்பவமும் பதிவாகியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து வீதிகளின் ஓரங்களிலும் இவ்வாறான மரங்கள் காணப்படுகின்றன. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் வலியுறுத்தியிருந்தனர். இதனை அடுத்து அந்த மரங்களை அகற்றும் நடவடிக்கையில், அரச மரக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது. (ப-246)

## நகர சபை விவாதத்தை பார்வையிட வந்த நாகம்



சாவகச்சேரி, நவ. 20

சாவகச்சேரி நகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீட்டின் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, நாகபாம்பு ஒன்று சபைக்குள்ளே வந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சபையின் உத்தேச பாதீட்டு வரைபுகள் சமர்ப்பிக்கும் கூட்டம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. வரைபின் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் தவிசாளர் உறுப்பினர்கள் சென்ற நடைபாதையில் பாம்பு ஊர்ந்து வந்துள்ளது. இதனைக் கண்ட பணியாளர்கள் பாம்பைப் பிடித்து போத்தலில் அடைத்தனர். (ப-9)

# வாழைத் தண்டில் விளக்கேற்றி எமது மாவீரரை அஞ்சலியுங்கள்

## வவுனியா பிரஜைகள் குழு கோரிக்கை



வவுனியா, நவ.20

ஒவ்வொருவரும் தமது வீடுகளுக்கு முன்னால் வாழைக் குற்றிகளை நட்டு, அதில் விளக்கேற்றி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வைக் கடைப்பிடிக்குமாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

உலகளாவிய ஒரு கொள்ளை நோய்த் தொற்றுக் காலத்தில் எமது மக்களை பொதுவெளியில் பெருந்திரளாக ஒன்றுகூடி தமிழீழத் தேசிய மாவீரர் நாள் எழுச்சி நினைவேந்தலைக் கடைப்பிடிக்குமாறு கேட்க முடியாத நிலையில் இருக்கிறோம். வழமைபோன்று இம்முறையும் வவுனியா நகரசபை மண்டபத்தில் பிரத்தியேகமாக திருக்கோவில் அமைக்கப்பட்டு கருவூலத்தில் மாவீரர் உருவப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்நாள் எழுச்சி நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்படும். சமநேரத்தில், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளுக்குள் அடைபட்டுக் கிடக்காமல் வாசல் படி இறங்கி முற்றத்துக்கு வாருங்கள். முற்றத்தில் வாழைத்தண்டுகளில் பொதுச்சுடருக்கான ஏற்பாடுகளைச் செய்து தமிழ்த் தேசிய இனத்தின் மாவீர ஆத்மாக்களை நினைந்துருகி மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு விளக்கேற்றுங்கள். கைப்பேசிகளில் மாவீரர் உறுதியுரைப் பாடலை ஒலிக்க விடுங்கள். முடிந்தால், ஒவ்வொரு கிராமங்களிலும் அக்கம் பக்கம் என்று வசிக்கும் மாவீரர் போராளிக் குடும்பங்களும், தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் உங்கள் சூழலுக்கேற்ப ஒரு வீட்டு முற்றத்தையோ அல்லது ஊரின் ஒரு பொது இடத்தையோ தேர்வு செய்து அங்கு சிறு குழுமமாக ஒன்றுகூடி மாவீரர்களை நினைவேந்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும். அதேவேளை தமிழர் தாயகத்தில் உள்ள துயிலுமில்லங்களில் நடைபெறும் நினைவேந்தல்களில் துயிலுமில்லங்களுக்கு அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் அந்தந்த துயிலுமில்லங்களுக்குரிய ஏற்பாட்டாளர்களின் அறிவுரைகள், ஆலோசனைகளுக்கு கட்டுப்பட்டு சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடித்து நினைவேந்தல்களில் கலந்துகொள்ளவும் -என்றுள்ளது. (ப-ரி3)

# பறங்கியாற்று திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## விவசாயிகள் கோரிக்கை



முல்லைத்தீவு, நவ.20

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் பறங்கியாற்று நீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக குழுக்கள் அமைக்கப்பட்ட போதும் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

துணுக்காய் பிரதேசத்தில் இருந்து அதிகளவான நீர் கடலில் சென்றடைகின்றது. பறங்கியாறு நீர்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் செயலணி உள்ளிட்ட பொறியியலாளர் குழு ஒன்று வந்து பார்வையிட்டுச் சென்றார்கள் ஆனால் அந்த வேலைத்திட்டம் இதுவரை நடைபெறவில்லை. பறங்கி ஆற்றை மறித்து மழைநீரைச் சேகரித்து பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களுக்கு நீரை விநியோகம் செய்வதாக திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் அந்தத் திட்டம் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இடம்பெற வில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். (ப-19)

# மீனவப் பெண்கள் குழுவால் கருவாடு பதனிடும் முயற்சி

## வாழ்வாதாரத்தை ஈடுசெய்ய வழி



மன்னார், நவ.20

வடமாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள மீனவப் பெண்கள் குழுக்களினூடாக சந்தைப்படுத்த முடியாத மீன்கள் சிலவற்றை மன்னாரில் நியாய விலையில் கொள்வனவு செய்து, கருவாடு பதனிடும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. பதனிடப்பட்ட கருவாடுகள் பொதி செய்யப்பட்டு சந்தைப்படுத்தலுக்குத் தயாராகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பணியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த நடவடிக்கைகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீனவ கிராமங்களில் இடம்பெற்று வருகின்றது.

கொரோனாத் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவப் பெண்கள் குழுவினர், தற்போதைய சூழ்நிலையில் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-56)

# கிளிநொச்சிக்கு புதிய அதிபர்கள்

கிளிநொச்சி,நவ.20

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி செல்வா நகர் அ.த.க.பாடசாலைக்கு சி.மகேந்திரராஜா,ஆனையிறவு கண்ணகிநகர் அ.த.க.பாடசாலைக்கு பா. ஜெகன், வட்டக்கச்சி மத்திய கல்லூரிக்கு ப. இரவீந்திரன் ஆகியோர் புதிய அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபர்களாக, ஆரம்ப பிரிவுக்கு பொறுப்பாகவும் பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கட்டைக்காடு பாடசாலைக்கு எஸ் .சுதர்சன் புதிய அதிபராக நியமனம் பெற்றுள்ளார். (ஜ-214)

# இன ஒற்றுமைக்குத் தடையாக இருந்தால் கடும் நடவடிக்கை

## தயங்கமாட்டேன் என்கிறார் மன்னார் புதிய செயலர்

மன்னார், நவ.20

இன – மத வேறுபாடின்றியே எனது சேவைகள் இடம்பெறும். இங்குள்ள மத இன வேறுபாடுகள் அனைத்தையும் எனது பதவிக் காலத்தில் நீக்கியவளாகவே எனது பணியை நிறைவுசெய்து செல்வேன். இதற்கு யாராவது தடையாக இருந்தால் அல்லது இந்த ஒற்றுமையை யாராவது குழப்புவதற்கு முனைந்தால் எனது நடவடிக்கை மிகவும் கடுமையாக இருக்கும். இவ்வாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ. ஸ்ரான்லி டிமெல் தனது பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த மாவட்டத்தையும் இங்குள்ள மக்களையும் நான் உண்மையாக நேசிக்கின்றேன் என்றால் நான் இந்த மாவட்டத்துக்கு வருவேன் என உறுதியாகத் தெரிவித்திருந்தேன். அதுவும் தற்பொழுது உறுதிசெய்யப்பட்டுள்ளது. எனக்குப் பல தடைகளும் சவால்களும் இருந்தபோதும் இறைவன் என்னைக் கைவிடாது இவ் மாவட்டத்துக்குப் பணிசெய்ய அழைத்துள்ளார்.

நான் மன்னாரில் பணிசெய்த காலத்திலும், வெளி மாவட்டங்களில்பணிசெய்த காலத்திலும் இங்குள்ள ஒவ்வொரு மதங்களைச் சார்ந்த மதப் பெரியார்கள் எனக்குப் பல வழிகளிலும் அன்புக்கரங்கள் நீட்டியவர்கள். ஆகவே இவர்களின் அன்பும் ஆசீயும் தொடர்ந்து எனக்கு இருந்து வரும் என்பது எவ்வித ஐயமுமில்லை. நான் இன-மத என்ற எவ்வித பாகுபாடுகளுமின்றி செயலாற்றுவேன். இங்குள்ள மத-இன வேறுபாடுகள் அனைத்தையும் எனது பதவிக் காலத்தில் நீக்கியவளாகவே எனது பணியை நிறைவுசெய்து செல்வேன். -என்றார். (ப-60)

# டெங்கை கட்டுப்படுத்த அனைவரும் முன்வரவும்

## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சுகாதாரக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கலாம். எனவே இவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

நுளம்பு பெருக வாய்ப்புள்ள திண்மக் கழிவுகள் அகற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இவற்றுக்கு மக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். -என்றார். (ஐ-17)

# தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் தீர்வு வேண்டும்

## சிறிதரன் எம்.பி வலியுறுத்து

கிளிநொச்சி, நவ.20

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை முன்வையுங்கள் நாடு வளர்ச்சியை நோக்கிச் செல்லும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களிடம் தாங்கள் ஓர் வேற்று நாட்டில் வாழும் உணர்வும் எண்ணமும் இருக்கிறது. காரணம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் அங்கு குவிக்கப்பட்டு அவர்களுடைய பிரசன்னத்தோடு அந்த மக்கள் அங்கு அடக்கப்பட்டுக் கொண்டுள்ளார்கள். அவர்களுடைய சொந்த நிலங்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் சுதந்திரமாக அந்த மண்ணிலே வாழமுடியாமல் இருக்கிறார்கள். அப்படியானால் அவர்கள் எப்படி இந்த நாட்டின் பிரஜைகள் என்று சொல்ல முடியும். இந்த நாடில் வாழும் தமிழர்கள் சரியான இலக்கோடும் நிம்மதியோடும் உண்மையான உரித்துக்களுடனும் வாழவேண்டும். நீங்கள் திறந்த மனதோடு எல்லா இனங்களையும் மதிக்கின்ற, குறிப்பாக 70 ஆண்டுகளாகத் தங்களுக்கு உரித்தான உரிமைக்குப் போராடுகின்ற இந்த தமிழ் இனத்துக்காக ஒரு விடிவை நோக்கிய பயணத்தில் பேசுவதற்குத் தயாராகுங்கள் - என்றார். (ப)

# 157 தேங்காய் திருடியவருக்கு 50 ஆயிரம் ரூபா பிணை


சாவகச்சேரி, நவ. 20

தென்னந்தோப்பில் 157 தேங்காய்கள் திருடிய நபருக்கும், ஒரு கிராம் 500 மில்லிகிராம் கஞ்சா உடைமையில் வைத்திருந்த நபருக்கும் சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் பிணை வழங்கியது.

கொடிகாமத்திலுள்ள தென்னம் தோப்பில் தேங்காய் பிடுங்கிய வேளையில் தோட்ட உரிமையாளரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரும், கொடிகாமம் நகரப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபரைப் சோதனையிட்ட போது கைப்பற்றப்பட்ட கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த நபரும் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப் பட்டனர்.

சுமார் 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 157 தேங்காய்கள் பிடுங்கியதாகவும், ஒரு கிராம் 500 மில்லிகிராம் கஞ்சா உடைமையில் வைத்திருந்ததாகவும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (ஒ-9)

# கொரோனா விழிப்புணர்வு



கொழும்பு, நவ.20

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனாப் பரவலை அடுத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் கொடிகாமம் நகர் பகுதியில் கொரோனா விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் நேற்றுமுன்தினம் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் பஸ்தரிப்பு நிலையப் பயணிகள் சாரதிகள், நடத்துநர்கள், சந்தை உட்புற வியாபாரிகள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு முகக்கவசம் மற்றும் கை சுத்திகரிப்பு திரவம் என்பன வழங்கப்பட்டன. (ஐ-159)



# ஊத்துக்குளத்தின் அணைக்கட்டு படையினரால் மறுசீரமைப்பு


வவுனியா, நவ.20

வெடிப்புக்குள்ளான நெடுங்கேணி ஊத்துக்குளத்தின் அணைக்கட்டு கொக்கெலியவில் உள்ள படையினரால் அண்மையில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பரந்தளவிலான பிரதேசங்களில் பயிரிடப்பட்டிருந்த பயிர்களுக்கும், தாழ்நிலக் கிராமங்களுக்கும் ஏற்படஇருந்த அனர்த்தங்கள் தடுக்கப்பட்டன.

கடந்த சில நாள்களாகக் கிடைக்கப் பெற்றுவரும் தொடர்ச்சியான மழை வீழ்ச்சி காரணமாக குளத்தின் நீர்மட்டம், வான் கதவு மட்டம் வரை அதிகரித்தது. இதனால் குளத்தின் அணைக்கட்டில் சுமார் 15 அடி நீளமுள்ள வெடிப்பு ஒன்று ஏற்பட்டது. இதன் மூலம் 74 ஏக்கர் தாழ்நிலப் பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த மரக்கறி மற்றும் ஏனைய சேனைப் பயிர்ச்செய்கைகளுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது.

இதனை அடுத்து நெடுங்கேணி கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், 563 ஆவது பிரிகேட்டின் கொக்கெலியாவையைத் தளமாகக் கொண்ட 7அவது இலங்கை சிங்கப் படையினருடன் இணைந்து இந்தப் பிராந்தியத்தில் ஏற்படவிருந்த அனர்த்தத்தைத் தடுக்கும் வகையில் குளத்தின் அணைக்கட்டை சீர் செய்தனர். (ப-ரி4)

# தொடர் மழை காரணமாக கீரைச் செய்கை பாதிப்பு



யாழ்ப்பாணம், நவ.20

வலி.கிழக்கு பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக கீரைப் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, புத்தூர் மற்றும் ஊரெழு போன்ற பகுதிகளில் அதிகமான இடங்களில் விவசாயிகள் கீரைச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது பெய்து வரும் மழை காரணமாக கீரைத்தோட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டு கீரைப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் சந்தைகளில் ஒரு பிடி கீரை 50 ரூபா முதல் 70 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றன. (ஐ-17)

# விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு இலங்கைக்கான சிறந்த விவசாய நடைமுறைகள்

## (SL -Good Agricultural Practice)

ஆக்கம்:
மு.விளம்பிதன்
விவசாயப் போதனாசிரியர்,
மாகாண விவசாயத்திணைக்களம்(வ.மா)

விவசாய உற்பத்தியின் போது சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகவியல் பேண்தகு தன்மையினை பாதுகாக்கும் விதத்தில் ஆரோக்கியமானதும் உயர் தரமானதுமான உணவு உற்பத்திக்காக மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் சிறந்த விவசாய நடைமுறைகள் எனப்படும். (FAO, 2003) ஆரோக்கியமானதும் தரமானதுமான உணவுகளுக்கு உலகில் அதிக கேள்வி நிலவுகின்றது. நுகர்வோரின் கேள்விகளுக்கு ஏற்ப தரமான ஆரோக்கியமான உணவுகளை உற்பத்தி செய்வது சகல விவசாயிகளினதும் கடமையாகும். இன்று சந்தையில் காணப்படும் விவசாய உற்பத்திகளை நுகர்வதற்கு பாவனையாளர்கள் தயக்கம் காட்டுவதை காண முடிகின்றது. எனவே விவசாயிகளினால் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் உற்பத்திகளின் தரம் மற்றும் ஆரோக்கியத்தை நுகர்வோருக்கு உறுதி செய்யும் வகையில் பண்ணை உற்பத்திகளை அத்தாட்சிப்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தல் அவசியமாகும். எனவே விவசாயத் திணைக்களத்தினால் 2015இல் முதன் முதலாக இலங்கைக்கான சிறந்த விவசாய நடைமுறைகள் (SLGAP) அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையினுள் சிறந்த விவசாய நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான இலங்கைக்கான சிறந்த விவசாய நடைமுறைகள் தொடர்பான பிரமாணங்களானது விவசாயத்திணைக்களம் மற்றும் இலங்கை தர நிர்ணய நிறுவனம் என்பனவற்றினால் ஒன்றிணைந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நியமங்களின் பிரகாரம் சிறந்த விவசாய நடைமுறைகள் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் SLGAP சான்றிதழினை வழங்குதல் ஆகியன விவசாயத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேசிய தேவையாகிய இச்செயற்றிட்டத்தினை விரிவுபடுத்துவதற்காக மாகாண விவசாயத்திணைக்களங்கள், மாகாண இடைக்கடமை பிரதேசங்கள் மற்றும் மகாவலி அதிகார சபையின் நிறுவனங்களை ஒன்றிணைத்து இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இச்செயற்றிட்டத்தின் மூலம் விவசாய உணவுப்பயிர்களின் தரம் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், அதற்காக இலங்கையின் சிறந்த விவசாய நடைமுறைகளுக்கான (SLGAP) சான்றிதழும் விவசாயத்திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது.

### SLGAP அத்தாட்சிப்படுத்தல்

குறித்த விவசாய உற்பத்திப்பொருளானது விதை அல்லது நடுகைப்பொருளிலிருந்து இறுதி உற்பத்தி பொருள் வரையிலான சகல நடவடிக்கைகளும் சிறந்த விவசாய நடைமுறைகளின் நியமங்களுக்கு அமைவாகவும் உற்பத்திப்பொருளின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் தரத்தினை பேணும் விதத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தி வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றாகும்.

இச்சான்றிதழானது சுயாதீனமான குழுவொன்றினால் சிபாரிசு செய்யப்பட்டு விவசாயப்பணிப்பாளர் நாயகத்தின் கீழுள்ள விதை அத்தாட்சிப்படுத்தல் தாவர பாதுகாப்பு சேவையின் சிறந்த விவசாய நடைமுறைகளை அத்தாட்சிப்படுத்தல் அலகு மூலம் வழங்கப்படும்.



### சிறந்த விவசாய நடைமுறைகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவம்

#### 1. விவசாய உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்களிற்கு

- சர்வதேச சந்தைகள் மற்றும் சிறப்பங்காடிகளுக்கு தரமான உற்பத்திகளை விநியோகிப்பதற்கான வாய்ப்பு கிடைக்கும்.
- பயிர்ச்செய்கையின் போது ஏற்படும் உற்பத்திச்செலவினை குறைத்துக் கொள்வதன் மூலம் கூடிய வருமானம் பெறப்படும்.
- தரமான விளைச்சலினை பெற்றுக் கொள்வதன் மூலம் உற்பத்திகளுக்கு உயர் விலை பெறப்படுவதுடன் உற்பத்திகள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பமும் குறைவு.
- பண்ணையிலிருந்து பாதுகாப்பான உற்பத்திப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.
- GAP இனை நடைமுறைப்படுத்தி முறையான பண்ணையொன்றை அமைப்பதன் மூலம் பண்ணையில் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படும்.
- பண்ணைத்தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

#### 2. நுகர்வோருக்கு

- நஞ்சற்ற உணவுகள் கிடைக்கும்.
- உயர் தரமானதாகவும், பாதுகாப்பானதாகவும் உற்பத்தி செய்யப்பட்ட விவசாய உற்பத்திகளை நம்பிக்கையுடன் நுகர்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.
- சுற்றுச்சூழலுக்கு நேயமான உற்பத்திகள் கிடைக்கும்.
- GAP சான்றிதழினை நடைமுறைப்படுத்த விவசாயிகள் பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்

#### 1. செய்கை பண்ணும் நிலத்தின் வரலாறும் நிலமுகாமைத்துவமும் தொடர்பான அறிக்கையொன்றை பேணல்.

- பயிர்ச் செய்கை நடவடிக்கையானது இரசாயன ரீதியாக அல்லது உயிரியல் ரீதியாக பாதிப்படைவதனை தவிர்த்துக்கொள்ளல்.
- குறித்த பயிர்ச்செய்கை நிலமானது கடந்த காலத்தில் எவ்விதமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது என்பதனை அறிந்து கொள்ளல்.
- பயிர் உற்பத்தியானது பாதிப்படைவதற்கான அபாயத்தினை தவிர்த்துக் கொள்ளல்.

#### 2. பண்ணை கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம்

- பண்ணையை சுற்றி பாதுகாப்பு வேலி அமைத்தல்.
- உள்வருவதற்கும் வெளிச்செல்வதற்கும் வாயில்கள் பொருத்துதல்.
- காற்று பலமாக வீசும் பிரதேசங்களில் காற்றுத் தடைகள் இடல்.
- பண்ணை உபகரணங்கள் மற்றும் விவசாய இயந்திரங்களை வேறான இடம் ஒன்றில் வைத்திருத்தல்.

#### 3. பயிர்களை ஸ்தாபித்தல் மற்றும் பயிர்ச்செய்கை பராமரிப்பு நடவடிக்கைகள்

- ஒவ்வொரு பயிருக்கும் பொருத்தமான வர்க்கங்கள் தெரிவுசெய்யப்படுவதுடன் தரமான விதைகள் பயன்படுத்துவதனை உறுதிசெய்தல் வேண்டும்.
- நிலத்தை பண்படுத்துதல், பயிர் நாட்டல், பயிர்வித்தல், களைக்கட்டுப்பாடு, பசளையிடல், நீர்ப்பாசனம், அறுவடை செய்தல் மற்றும் அறுவடைக்கு பின்னான கையாளுதல் போன்ற பயிராக்கவியல் நடவடிக்கை களினை சிபாரிசுக்கமைய மேற்கொள்ளல் வேண்டும்.

**உற்பத்திப் பொருளில் காணப்படும் Bar code இனை பயன்படுத்தி உற்பத்தியாளர் பெயர் விபரங்களுடன் உற்பத்தி பிரதேசம் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.**

#### 4. ஒருங்கிணைந்த நோய், பீடை முகாமைத்துவம்

- நோய் மற்றும் பீடைகளை அவதானமாக இனங்கண்டுகொள்ளல், உடனடியாக முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்படுத்தல்.
- பீடைத்தாக்கத்தை தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளான காய்களிற்கு உறையிடல், கவர்ச்சிப்பொறிகள் இடல், பூச்சி உட்புகா வலைகளை பயன்படுத்தல்.
- அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டும் பொருத்தமான சிபாரிசு செய்யப்பட்ட பீடை நாசினிகளை உரிய அளவில் பயன்படுத்தல்.
- பயன்படுத்திய பீடை நாசினிகள் தொடர்பான அறிக்கைகளை பேணல்.

#### 5. ஒருங்கிணைந்த தாவரப் போசணை முகாமைத்துவம்

- மண் பரிசோதனை மேற்கொண்டு பயிரிற்கு தேவையான பசளையளவினை மாத்திரம் பயன்படுத்தல்.
- தரமான பசளைகளை பயன்படுத்தல்.
- சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளை உரிய முறையில் களஞ்சியப்படுத்தி பயன்படுத்தல்.
- இயலுமானவரை பண்ணையில் தயாரிக்கப்பட்ட சேதனப்பசளையை பயன்படுத்தல், வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட சேதனப் பசளையை பயன்படுத்துவதாயின் தேவையான பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரே பயன்படுத்தல்.

#### 6. பீடை நாசினி முகாமைத்துவம்

- பீடை நாசினிகளை பொறுப்புடனும் அவதானத்துடனும் பயன்படுத்தல்.
- உரிய முறையில் பீடை நாசினிகளை களஞ்சியப்படுத்தல்.
- பீடை நாசினி கொள்கலனிலுள்ள விபரச்சுட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படல்.
- நச்சுத்தன்மை குறைந்த பீடை நாசினிகளை உரிய அளவில் மாத்திரம் பயன்படுத்தல்.
- பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் மூலம் சகல பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி பீடை நாசினிகளை பயன்படுத்தல்.
- பீடை நாசினிக்கழிவு முகாமைத்துவத்தினை சரியான முறையில் கடைப்பிடித்தல்.

#### 7. அறுவடைக்கு பின்னான பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ளல்

- உரியளவில் முதிர்ச்சியடைந்த பருவத்தில் பொருத்தமான நேரத்தில் அறுவடை செய்தல்.
- பொருத்தமான அறுவடை செய்யும் முறைகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தல்.
- சுத்தமான பொருத்தமான கொள்கலன்களில் பொதி செய்தல்.

தொடரும்..........

தொடர்ச்சி நாளை மறுதினம் பிரசுரமாகும்

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2021 ஆம் ஆண்டிற்கான 2 ஆவது மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2021.01.01ஆம் திகதி தொடக்கம் 2021.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 20.11.2020 – 03.12.2020 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 04.12.2020 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 04.12.2020 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 34,300.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக் கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 61,000.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 50,000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| | ஏழாலை மயிலங்காடு கோழிக் கடை | 750.00 | 7,500.00 | 155,000.00 | 250.00 |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2020.10.12ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
20.11.2020

## 2021ம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்
### மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கும், கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்குமான வழங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் 2021ம் ஆண்டுக்காக பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 24/12/2020ம் திகதி வரை கோரப்படுகின்றது.

பதிவு நிபந்தனைகள், கட்டண விபரங்கள், மாதிரி விண்ணப்ப படிவம் என்பவற்றை www. kilinochchi.dist.gov.lk மாவட்ட செயலக இணையத்தளம் அல்லது மாவட்ட செயலக கணக்கு கிளை யிலோ 24/12/2020ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளலாம். 021 2285352, 021 2285309

**திருமதி றூ.கேதீஸ்வரன்**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம்,**
**கிளிநொச்சி.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
08 . 11 . 2002

கர்த்தன் மடியில்
05 . 11 . 2016

**செல்வன் ஆனந்தகுமார் ஜெயபிரகாஷ் (பிரகாஷ்)**
(யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவன்)
திதி: ஐப்பசி ஷஷ்டி (20.11.2020)

ஆண்டுகள் நான்கு ஆனதென்று அழுதிங்கு புலம்புகின்றோம்
மாறாத வடுவாய் - மகனே பிரகாஷ் ஆறாதய்யா - உன் நினைவு!
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
அப்பா,அம்மா, தம்பி, தங்கை
தகவல் :தந்தை (ஆனந்தன்)

இராஜவீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

# மரண அறிவித்தல்
## இராஜரட்ணம் நவராஜா
**(ஓய்வுபெற்ற பொறியியல், மேற்பார்வையாளர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்)**



பிறப்பு 22.09.1944
இறப்பு 19.11.2020

அனுராதபுரத்தை பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கையும், உரும்பிராய் தெற்கையும் வதிவிடமாக கொண்ட இராஜரட்ணம் நவராஜா அவர்கள் நேற்று (19.11.2020) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தபேந்திரன் மற்றும் இராஜேஸ்வரியின் அன்பு மருமகனும், உஷாந்தினியின் அன்பு கணவரும் தனுஷன், தமயந்தி (லண்டன்), தாட்ஷாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவப்பிரியா, கிஷோக்குமார் (லண்டன்), பத்மராஜன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுக வடிவேல், ஜெயமணி, கமலாதேவி (கனடா) மற்றும் திருச்செல்வம், வசந்தகுமாரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆனந்தன், நாகரட்ணம் (ஜேர்மன்), நிமலகாந்தன் (கனடா), வாசுகி சிறீக்குமார் (ஜேர்மன்), யோகநந்தி சற்குணநாதன் (ஜேர்மன்), தவராஜா சிவசக்தி (பிரான்ஸ்), சாமினி ஜெயக்குமார் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் டனிஷா, டிவ்யனா, பகிஷனா, மதுமிலா, கார்மிஷா, துஷிந்தன், வலக்சன், தருக்சன், நிவோஷன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (20.11.2020) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக முற்பகல் 11 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுல வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777 283 681**

# ஹிஜாப்புடனான பொலிஸ் சீருடை நியூசிலாந்து அறிமுகம்

வெலிங்டன், நவ.20

அதிக முஸ்லிம் பெண்கள் பொலிஸ் சேவையில் இணைவதை ஊக்குவிக்கும் பொருட்டு நியூசிலாந்தில் ஹிஜாப்புடனான உத்தியோகபூர்வ பொலிஸ் சீருடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரான ஸீனா அலி இந்த சீருடையை அணியும் முதல் பெண்ணாக பதிவாகியுள்ளார். நாட்டின் பன்முகச் சமூகங்களைப் பிரதிபலிக்கும் வகையில் பொலிஸ் சேவையை உருவாக்கும் பொருட்டே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அந் நாட்டுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். லண்டன் பெருநகர பொலிஸார் மற்றும் ஸ்கொட்லாண்ட் பொலிஸில் பெண்கள் ஹிஜாப் அணிய அனுமதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நடந்து முடிந்த 2020 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி தேர்ச்சியடைந்த

யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய மாணவன்
**செல்வன்.உ.வர்னுயன்**
**164 புள்ளிகள்**



யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவி
**செல்வி.சி.யதுசிகா**
**156 புள்ளிகள்**



இவர்கள் இருவரையும் மேலும் பல வெற்றிகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துவதோடு, இப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவ செல்வங்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**உடுப்பிட்டி வீதி,**
**தொண்டைமானாறு.**

**பகீரதன் - பெரியப்பா,**
**வனிதா - பெரியம்மா.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி **190 புள்ளிகளைப்** பெற்று பாடசாலையில் முதலிடம் பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை சேர்த்த **லகுகுமாரின் பேரன்**

**செல்வன்**
**சந்திரகுமார் ஷாருஜன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்திமார், சித்தப்பாமார்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் **187 புள்ளிகளைப்** பெற்று சித்தியடைந்த **யா/இணுவில் மத்திய கல்லூரி** மாணவியாகிய

**செல்வி**
**பிறிஸ்னிகா பிஞ்ஞகன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

**வட்டுவினி லேன், இணுவில்.**

**வாழ்த்துவோர்:**
**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. த.ஈஸ்வரரமணன்
(மு/உயிலங்குளம் அ.த.க.பாடசாலை-அதிபர்)



சத்தியானந்தம்-ஆருண்யா
169-புள்ளிகள்



பிரதாப்-அபிசிகா
164-புள்ளிகள்



செல்வகுமார்-சங்கவி
127-புள்ளிகள்

**முல்லைத்தீவு உயிலங்குளம் அ.த.க. பாடசாலையில்** 2020ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் ஒருவர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்டமைக்காக பாடசாலை, அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**பாடசாலைச் சமூகத்தினர்.**

## STATE MINISTRY OF RURAL HOUSING & CONSTRUCTION AND BUILDING MATERIALS INDUSTRY PROMOTION

## DEPARTMENT OF BUILDINGS

## INVITATION FOR BIDS

## RENOVATION WORKS OF EXCISE STATION AT VAVUNIYA.

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Renovation works of Excise Station at Vavuniya" as described below and estimated cost RS.7.84 million (Excluding VAT).
   The construction period is **90 days.**
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. Since the Total Cost Estimate of this Procurement is below Rs.25 Mn.Regional preference and CIDA grade preference shall apply as stipulated in public Finance Circular No.04/2016(ii) & Public finance Circular No.03/2020.
3. To be eligible for contract award, the successful bidder/bidders shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade C7,C6 or C5 with the Institute for Construction industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021 - 2222781, Facsimile: 021 - 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** from **20.11.2020 until 07.12.2020** from **9:00hrs to 15:00 hrs upon payment of Non-refundable fee of Rupees Three Thousand only(Rs.3,000/-)**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** to reach **on or before 10.00 hrs on 09.12.2020.** Bids will be opened soon after closing at the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings.**
   - **for an amount of Rs.156,000.00**
   - valid up to **10.03.2021.**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

**Eng. A.Nawas Atham,**
Director (R2)
Department of Buildings,
2nd Floor,"Sethsiripaya",
Battaramulla.

## கண்ணீர் அஞ்சலி



**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபன, யாழ். பிராந்தியக் காரியாலயத்தில்**
கடமையாற்றி ஓய்வு பெற்ற.

### திரு.இராஜரட்ணம் நவராஜா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிராந்திய முகாமையாளரும், சக ஊழியர்களும்.**
**பிராந்தியக் காரியாலயம் (வடக்கு),**
**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு



கடந்த 23.10.2020 வெள்ளிக் கிழமை சிவபதமடைந்த

அமரர்

### வீரையா அரவிந்தன்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.11.2020) சனிக் கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**குடும்பத்தினர்.**

**958/31, தலையாழி லேன்,**
**கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**0777 548 424**

## மீள் கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்.
## சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2021

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், என்பவற்றிற்கு **2021.01.01** ஆம் திகதி தொடக்கம் **2021.12.31** ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2020.11.20 - 2020.11.27நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2020.11.27 பி..ப 2.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி :- 2020.11.27 பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டுபதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டை**யையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டுவருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் சந்தையில் மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
3. பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவுசெய்த இடத்தில் நடைமுறைப் படுத்துவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகரின் சிபாரிசுக்கமைவாகவே செயற்படவேண்டும். அத்துடன் தெரிவுசெய்யும் இடத்திற்கான குத்தகை அல்லது வாடகை குத்தகையாளராலேயே கொடுக்கப்படவேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் $^{1}/_{3}$ பகுதியை 2020.12.07 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ளவேண்டும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரிய முறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
10. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு (5'X 3') ரூபா 50.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 5.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
11. சந்தைகள் வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும். சந்தையை குத்தகைக்குப் பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
12. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
13. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத் தொகைமீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
14. 2015.11.09 ஆம் திகதிய வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.
15. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2021 குத்தகை அட்டவணை.**

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| **சங்கானை உப அலுவலகம்** | | | | | |
| 01 | சங்கானைகோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 229,900.00 | 3,000.00 | 500.00 |
| 02 | சங்கானைகோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 190,190.00 | 3,000.00 | 500.00 |
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | | |
| 01 | சத்தியகாடுசந்தை | ___ | 1,264,600.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | பல்லசுட்டிசந்தை | ___ | 30,850.00 | 1,000.00 | 250.00 |
| 03 | தொல்புரம் மத்தியசந்தை | ___ | 27,850.00 | 500.00 | 250.00 |
| 04 | பொன்னாலைவாராந்தச் சந்தை | ___ | 43,250.00 | 500.00 | 250.00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | | |
| 01 | சங்கரத்தைசந்தை | ___ | 159,050.00 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டைபொதுச்சந்தை | ___ | 20,900.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 146,300.00 | 1,000.00 | 500.00 |
| 04 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 147,500.00 | 1,000.00 | 500.00 |
| **அராலி உப அலுவலகம்** | | | | | |
| 01 | அராலி,செட்டியார்மடம் சந்தை | ___ | 23,810.00 | 500.00 | 250.00 |

தலைமை அலுவலகம்
வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம்.
2020.11.16

த.நடனேந்திரன்
தலைவர் உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.

### வடக்கு....

ஏற்பட்டுள்ளது என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடன் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளபோதும் அவற்றில் இருந்து விடுபடும் மாற்று வேலைத்திட்டம் ஜனாதிபதி கோத்தாபய அரசிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை நாட்டில் எந்தவொரு பொருளாதார வளர்ச்சியும் ஏற்படவில்லை. எமக்கு நாட்டை ஒப்படைக்கும் போது, மிக மோசமான நாடாகவே காணப்பட்டது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச்வின் ஆட்சியில் மிகப்பெரிய இரண்டு சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. ஈஸ்ரர் தாக்குதலின் பின்னர் நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்தது. அதன்பின்னர் கொரோனா வைரஸ் தாக்கத்தாலும் பொருளாதர வீழ்ச்சி ஏற்பட்டது.

இவை இரண்டும் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள போதும் நாம் கடன்களைச் செலுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தே வருகின்றோம். என்றார். (ஒ-44)

**விஞ்ஞான வகுப்புக்கள்**
**(தரம் 9, 10 & 11)**
**தனி, குழு மற்றும் ஒன்லைன் மூலமாகவும் கற்பிக்கப்படும்.**
076 688 9449
(பட்டதாரி ஆசிரியர்)



**நல்லூர்க் கந்தன்**
திருமண சேவை
எல்லா மதம், இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் விரைவாக ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
முற்பணம் குறைக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை வீதி, நல்லூர், MC அருகில், யாழ்ப்பாணம். **0779733183**
வி.ஜெயந்தி

**இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்**
**பிரிவு - 30**
**ONLINE COURSES (INDIVIDUAL/GROUP)**
***ENGLISH COURSES**
Foundation Diploma in English
Diploma in English
Diploma in Spoken English
Diploma in Teaching English
***ICT COURSES**
Diploma in MS-Office
Diploma in ICT
Diploma in H/W & Networking
காலம்: மூன்று மாதங்கள்
சான்றிதழ் வழங்கப்படும்.
ஆரம்பம்: சனி,ஞாயிறு 21,22/11/2020
10.00 AM- 01.00 PM
**கற்கைப்பிரிவில்:**
* பாடசாலை மாணவர்கள்
* உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்
* உத்தியோகத்தர்கள் அரச, தனியார் இணைய முடியும்.
மாணவர்கள் தமது பதிவினை அலுவல கத்தில் உறுதிப்படுத்தி Zoom வகுப்பில் இணைய முடியும். க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு மட்டும் விசேட பிரிவு ஆரம்பமாகின்றது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அலுவலகத்தில் பதிவுசெய்ய முடியும்.
On-line IELTS வகுப்புகள் ஆரம்பமாகின்றன
**பதிவு:**
Type your Name , Course Name to
**076 685 2529 /077 602 1794**
**IPS** Thirunelvely Jafna.

## இறக்குமதி...

வர்த்தகம் என்பது ஒருவழித் தடமல்ல. தற்போது இலங்கையில் காணப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை மற்றும் ஐரோப்பிய வியாபாரங்களில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வெளிநாட்டு நேரடி முதலீட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் விசனத்துடன் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு மற்றும் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ரொமேனியா தூதரகங்கள் இணைந்து இது தொடர்பில் அறிக்கை விடுத்துள்ளன.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 25 வருட காலப்பகுதியில் இலங்கைக்கு பரஸ்பர உதவிகளுக்கு மேலதிகமாக, ஒருபில்லியன்யூரோக்களுக்கு அதிகமான நன்கொடை உதவிகளை வழங்கி, இலங்கையின் நம்பகமான பங்காளாராக நாம் திகழ்கின்றமையை நாம் நினைவூட்டுகின்றோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை வரிச் சலுகை காரணமாக ஐரோப்பிய சந்தையில் போட்டிகரமான, பெருவாரியான வரி மற்றும் கோட்டா முறைமை இல்லாத வாய்ப்பை இலங்கை அனுபவித்த வண்ணமுள்ளது. இந்த பரஸ்பர வியாபார முன்னுரிமைகள் காரணமாக, உலகளாவிய ரீதியில் இலங்கையின் இரண்டாவது மாபெரும் ஏற்றுமதிச் சந்தையாக ஐரோப்பிய ஒன்றியம் திகழ்கின்றது.

வர்த்தகம் என்பது ஒருவழித் தடமல்ல. தற்போது இலங்கையில் காணப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கை மற்றும் ஐரோப்பிய வியாபாரங்களில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வெளிநாட்டு நேரடி முதலீட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக, பிராந்தியத்தின் மையமாகத் திகழும் இலங்கையின் முயற்சிகளுக்கு பெருந்தடையாக அமைந்துள்ளதுடன், ஏற்றுமதிக்கு அவசியமான மூலப்பொருள்கள் மற்றும் இயந்திர சாதனங்களின் இறக்குமதியை பாதிப்பதனூடாக ஏற்றுமதியிலும் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உலக வர்த்தக நிறுவனத்தின் ஒழுங்குவிதிமுறைகளுக்கமைவாக நீண்ட கால இறக்குமதித் தடை அமைந்திருக்கவில்லை என்பதை நாம் நினைவூட்டுகின்றோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சம்மேளனத் தீர்மானம் 30/1 இலிருந்து இலங்கை வெளியேறியமை என்பது ஒரு கவனிக்கப்பட வேண்டிய விடயமாக அமைந்துள்ளது. இலங்கையின் பன்முகச் சமூகங்கள் மத்தியில் சமாதான ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் நீதியை ஊக்குவிப்பதற்கு அரசு தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. இதற்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தயாராகவுள்ளது. இதற்கு சட்ட நீதி மற்றும் துடிப்பான சிவில் சமூகம் போன்றன அத்தியாவசியமானவை யாக அமைந்துள்ளன. எமது பகிரப்பட்ட சர்வதேச அர்ப்பணிப்புகள் மற்றும் கடப்பாடுகளின் பிரகாரம் இலங்கையுடன் ஆழமான ஈடுபாட்டை தொடர்ந்து முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (ஒ.இ)

---


## முதலாம் ஆண்டு நினைவஞ்

அமரர்



### கந்தவனம் தேவசிகாமன

தோற்றம் 14.09.1941 | மை 02.1

திதி: 20.11.2020

ஆலம் விழுதுகள் ஆயிரம் உறவுகள் ெ
குடும்ப உறவுகள் வீழ்ந்து விடாதிருக்க (
இருந்தீரே-ஐயா .
மாயப் புயல் வடிவில் காலனவன் இன்னு
சோகத்தை தந்து விட்டு சொல்லாமல் சென்
நல் வழிகள் காட்டி எம் குடும்பத்தி
ஒளி கொடுத்த தீபமே.
ஓராண்டு போனாலும் உங்கள் நினை
எங்கள் மனதை விட்டு நீங்காது

ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.
077 9138996

பிள்ளைகள், ப
பேரப்பிள்ள
பூட்டப்பிள்ள


---


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல் 2021

எமது சபையினால் 2021 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெ சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்ய விரும்பும் நர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (paints) நிறம் தீட்டும் பொருள்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருள்கள் மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள்கள்,உராய்வு நீக்கி
13. இரும்பு பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள் ,சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள் ,கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருள்கள் மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்,ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை,வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம்,மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி விளக்குகள் பொருத்தல்
13. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ண அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை தலைமை அலுவலகத்தில் கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00(வரிகள் நீங்கலாக) படல் வேண்டும்.

விண்ணப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கல் சேவைக்கான விண்ணப்பம் 2021" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபா தவிசாளர் தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப 31.12.2020 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் மேலதிக விபரா 0243243544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ,பளை.**
20.11.2020


---


## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினரும் மட்டுவில்தெற்குப் பிரிவு. அபிவிருத்தி உத்தியோகத் தருமான **திருமதி. நளாயினி சத்தியசாங்கர்** அவர்களின் பாசமிகு தந்தையார்

### கணபதி சங்கரப்பிள்ளை

அவர்கள் 20.10.2020 அன்று இறைவணடி சேர்ந்தார்.
அன்னாரின். பிரிவினால் துயருற்றிருக்கும் கும்பத்தினருக்கு சங்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பிரதேச செயலக**
**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி**


---


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### உதயகுமார் சறோஜாதேவி



மண்ணோடு உங்கள்
பூவுடல் மறைந்திட்டாலும் -
எங்கள் நெஞ்சோடு
உங்கள் நினைவுகள்
என்றும் உயிர் வாழும்
உங்கள் பிரிவு தந்த வலிகள்
எம் கண்களில் கண்ணீராய்
உதிர இறைவனிடம்
வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்

என்றும் நீங்கா நினைவுடன்
உறவுகள்
அல்லாரை வடக்கு,
மீசாலை.

தோற்றம் 04.04.1971 | மறைவு 21.10.2020


---


## கண்ணீர் அஞ்சலி

### திரு.இராஜரட்ணம் நவராஜா

முன்னாள் பெற்றோலியக் கூட்டுத்தாபன பொறியியல் பகுதி மேற்பார்வையாளர்



அருள்மிகு உரும்பிராய் பர்வத வர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை உறுப்பினரும் அம்பாள் அடியானுமாகிய திரு. இ.நவராஜா அவர்கள் இறைபதம் எய்திய செய்தி எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்துகிறது. அன்பு, பண்பு அமைதிக்கு உரித்தான அன்னாரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுக்கும். உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் சபையின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா என்றென்றும் அம்பாள் அடியில் சாந்திபெற பிரார்த்திக்கிறோம்.

**உரும்பிராய்.**

**பரிபாலன சபையினர்**
**உரும்பிராய்**
**பர்வதவர்த்தனி அம்மன் கோயில்**


---


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 05 . 1945



மறைவு 19 . 11 . 2020

### செல்லத்துரை நடேசபிள்ளை

வன்னியசிங்கம் வீதி. தாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நடேசபிள்ளை (19.11.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் பாலாம்பிகை தம்பதியரின் மருமகனும், சர்வானந்ததேவியின் (றஜனி) அன்பு கணவரும், காலஞ்சென்ற இராஜதுரை மற்றும் ஸ்ரீரஞ்சினியின் அன்பு சகோதரரும், தெய்வேந்திரம், பேரின்ப நாயகிதேவி, காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன், சிவானந்தன், மற்றும் கௌரி, சுந்தரகுமாரி ஆகியோரின் மைத்துனரும், விவேகானந்தன் (அமரர்), கமலாம்பிகை, சாரதாதேவி, குருபததாசர், கார்த்திகை குமரன் (அமரர்) ஆகியோரின் சகலனும், ஸ்ரீஸ்கந்தவேள் (அமரர்), ஸ்ரீசங்கர், மாதினி, ஸ்ரீகஜானன் கோபிகா, ஸ்ரீ பங்கஜா சிவரூபன், ஸ்ரீ தாட்சாயினி சுதர்சன், ஸ்ரீ ஜனனி அஜித், ஸ்ரீபவானி உமாசுதன் ஆகியோரின் சிறிய தந்தையும், ஜனகன், ஜனனி, மிதிலன், வித்யா ஸ்ரீவெங்கடேஷ், டிலக்ஷி பாலமுரளி, டுஷ்யந்தன் ஹிந்துஜா ஆகியோரின் மாமாவும், நிவேதிகா டிருஷாந்தன், கார்த்திகா ஆகியோரின் பெரியதந்தையும், சேரன், ஆரதி, நிதிலன், ஸ்வாதி, சௌமியா, வருண், அனிஸ், அஷ்வின், பிரவீனா, ஷயமி, ஹரிஸ், ஸ்ருதிகா, பார்கவன், அகரன், மவினேஷ், ஆதீஷ், ஹாய் பிரணவ், ரக்ஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.11.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**021 222 3527**

### பரு. நீதிமன்றில்...

நடத்த தடைவிதிக்கக் கோரி பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை குற்றவியல் சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுத் தொல்லையின் கீழ் இந்த விண்ணப்பம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி ஆகிய 3 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் தாக்கல் செய்யப்படுள்ளது.

இந்த விண்ணப்பம் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிர் மனுதாரர்களாக நினைவேந்தலை நடத்தும் சிலரது பெயர்கள் குறிப்பி டப்பட்டன.

இந்த மனு அழைக்கப்பட்ட போது பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன், சந்திரசேகரம், செலஸ்ரின் உள்ளிட்ட 6க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் தோன்றினர்.

“பொலிஸாரின் விண்ணபதில் உள்ள விடயம் தொடர்பில் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்று அழைக்கப்படவுள்ள நிலையில் பொலிஸார் இந்த விண்ணபத்தை தாக்கல் செய்துள்ளனர். அதனால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவின் முடிவை வைத்து இந்த விண்ணப்பதை விசாரணைக்கு எடுக்கவேண்டும்' என்று சட்டத்தரணிகள் மன்றுரைத்தனர்.

அதனால் வழக்கை வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஒத்திவைத்த பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலை சேர்ப்பிக்க உத்தரவிட்டது. (ஒ.இ)

### மல்லாகத்தில்...

துறை பொலிஸ் பிரிவில் மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த தடைவிதிக்கக் கோரி மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

“நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளன. அந்த நிகழ்வுகளைத் தடுப்பதற்கான கட்டளையை வழங்கவேண்டும்” என்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன் துறைப் பொலிஸார் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 106ஆம் பிரிவின் கீழ் இந்த விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பம் நேற்று நீதிமன்றால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிர் மனுதாரர்களாக வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகம், பூசகர் ஆகியோர் உள்பட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு அழைக்கப்பட்ட போது மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான 6க்கு மேற்பட்ட சட்டத்தரணிகள் தோன்றினர்.

“பொலிஸாரின் விண்ணப்பத்திலுள்ள விடயம் தொடர்பில் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்று அழைக்கப்படவுள்ள நிலையில் பொலிஸார் இந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளனர். அதனால் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யபட்ட எழுத்தாணை மனுவின் முடிவை வைத்து இந்த விண்ணப்பதை விசாரணைக்கு எடுக்கவேண்டும்” என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் மன்றுரைத்தார்.

அதனால் வழக்கை இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைத்த மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலை சேர்ப்பிக்க உத்தரவிட்டது. (ஒ.இ)

### மன்னார்...

“இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தீவிரவாத அமைப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. தீவிரவாத அமைப்பைக் கொண்டாடுவது அல்லது அதற்கு ஆதரவை வெளிப்படுத்தும் நிகழ்வுகளைத் தனியாகவோ, குழுவாகவோ ஒழுங்கமைப்பதும், பங்கேற்பதும், சட்டத்துக்குப் புறம்பானதாகும். மாவீரர் நாள் என்பது, விடுதலைப் புலிகளால் கடைப்பிடிக்கப்பட்ட மரபுகளில் ஒன்று. புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இத்தகைய நிகழ்வுகள் நடத்த அனுமதிக்கப்படாது” என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மற்றும் மன்னார் நீதிமன்றங்களில் இந்தத் தடை உத்தரவை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை பெற்றுக் கொண்டுள்ளனர்.

மாவீரர் நாளுக்குத் தடை விதிக்க உத்தரவிடக் கூடாது எனத் தெரிவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனு மீதான விசாரணை இன்று இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

### விபத்தில்...

கிளிநொச்சி உதயபுரத்தைச் சேர்ந்த நந்தகுமார நிதிலா (வயது-6) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி நடந்த விபத்தில் இவர் படுகாயமடைந்தார். பூநகரியில் இருந்து கிளிநொச்சி நோக்கி முச்சக்கர வண்டியில் பயணித்தபோது வீதியில் முன்பாக திரும்பிய டிப்பர் ஒன்றின் பின்புறத்தில் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானது.

அதில் முச்சக்கர வண்டியின் கூண்டுக் கம்பி தலையில் தாக்கி சிறுமி படுகாயமடைந்து மயக்கமுற்றுள்ளார்.

சிறுமி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்னதினம் உயிரிழந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்றுச் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

### வீட்டு இறப்பு...

வுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் மூன்றாம் அலை தீவிரம் பெற்றுள்ளது. வீடுகளில் திடீரென ஏற்படும் உயிரிழப்புக்கள் அதிரித்துள்ளதுடன், உயிரிழந்தவர்களில் பலருக்குக் கொரோனாத் தொற்று பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் கொரோனாத் தடுப்புச் செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அண்மைய நாள்களில் வீட்டில் உயிரிழக்கும் வயோதிபர்கள் மற்றும் நெடுநாள் நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில், சிலருக்குக் கொரோனாத் தொற்று இருக்கின்றமை தெரியவந்துள்ளது.

உடல் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் வயோதிபர்கள் மற்றும் நெடுநாள் நோயாளிகள் உடனடியாக வைத்திய சாலைக்குச் செல்வதன் மூலம், அவர்களது நலன் தொடர்பில் அவதானம் செலுத்த முடியும்என்றார். (எ-22)

### பாடசாலைகள்...

முதல் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நவம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த நிலையில் கொரோனாத் தொற்று நிலைமையால் அதை மேலும் இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இதன்படி நவம்பர் 23 ஆம் திகதி முதல் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்பதை அறிவித்துக்கொள்கின்றேன்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலும், தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளிலும் 23 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகாது.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் நாட்டில் ஏனைய பகுதிகளுக்குச் செல்லமுடியாது. ஏனைய பகுதிகளில் உள்ள மாணவர்களும் இப்பகுதிகளுக்கு வரமுடியாது.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளைத்தவிர நாட்டில் ஏனைய பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கு மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் நவம்பர் 23 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும். ஆரம்பத்தில் கடைபிடிக்கப்பட்ட சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படும்.

பாடசாலைகளை நடத்துவதற்கும், சமூக இடைவெளியைப் பாதுகாப்பதற்கும், சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அதிபர்கள் நடைமுறைகளைத் தயாரிக்க வேண்டும்.

அதிபர்கள் குழுவின் பரிந்துரைகளைச் சம்பந்தப்பட்ட கல்வி வலயத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கேற்ப பாடசாலைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ஒ.44)

### கொரோனாவை...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் குறைந்தளவில் இனங்காணப்படும் மாவட்டங்கள் தொடர்பில் குறைந்த அவதானம் செலுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் அங்கு ஆபத்தான நிலைமை ஏற்பட வாய்ப்புள்ளது.

தற்போது நாளாந்தம் 500 புதிய தொற்றாளர்கள் பதிவாவதுடன் 3 அல்லது 5 சாவுகள் பதிவாகின்றன. மேல் மாகாணத்தின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. அதிலும் கொழும்பு மாவட்டத்தின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது.

நாட்டில் கொரோனா வைரஸ் உடம்பில் உள்ளவர்கள் இன்றும் வெளியில் சுற்றித் திரிகின்றார்கள். அவர்கள் அனைவரும் இனங்காணப்பட வேண்டும். இல்லையேல் பேராபத்து தொடரும்- என்றார். (எ-22)

### சர்வதேசத்தை...

அலுவலர்களைச் சந்திப்பார்கள். சர்வதேச நிறுவன அதிகாரிகளைச் சந்திப்பார்கள். சந்தித்து ஏன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்த வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.

நேற்று அவர் அனுப்பியுள்ள கேள்வி பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பீர்களா? என்ற கேள்விக்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

நாங்கள் விரைவில் ஒரு முக்கியமான ஆராய்வுக் குழுவை நியமிக்க பூர்வாங்க ஏற்பாடுகளில் இறங்கியுள்ளோம்.

குறித்த குழுவில் எம்மோடு சேர்ந்தவர்களை விட சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், மனித உரிமை வல்லுநர்கள் போன்ற பலர் இடம்பெறுவார்கள். அந்தக் குழு அங்கத்தவர்கள் குறித்த ஐக்கியநாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்வார்கள். ஐக்கிய நாடுகள் அலுவலர்களைச் சந்திப்பார்கள். சர்வதேச நிறுவன அதிகாரிகளைச் சந்திப்பார்கள். சந்தித்து ஏன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்த வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்.

அவர்களுடன் சேர்ந்து ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறை பற்றி பேச வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. அதாவது போர்க் குற்ற சான்றுகளைச் சேகரித்து பாதுகாப்பாக சேமித்து வைத்தல், எந்த வகையில் குற்றம் புரிந்த இலங்கையின் அரசியல் தலைவர்களையும், யுத்த கால படையணித் தலைவர்களையும் சர்வதேச நீதித்துறைப் பொறிமுறைகளுக்குள் கொண்டு செல்வது பற்றியும் ஆராய வேண்டியுள்ளது. போகப் போக விபரங்களை நான் தருவேன். என்றுள்ளது. (எ-இ)

குடும்பப்...
இளம் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு முல்லைத்தீவு, முள்ளிய வளை, முறிப்புக் கிராமத்தில் நடந்துள்ளது.
32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான ஜெ.நிரோசன் என்பவரே உயிரிழந்துள்ளார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய குடும்பப் பெண் முள்ளி வளைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.
குடும்பத் தலைவரின் தலையில் இரு வெட்டுக் காயங் கள் காணப்படுகின்றன என்றும், இது தொடர்பான மேலதிக விவரங்களை விசாரணையின் பின்னரே தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
தற்போது உடல் முல்லைத்தீவு மாவட்ட வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (எ-19)

சா/த....
படும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள் ளது. 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் மாதம் நடக் கவிருந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்று நிலைமையால் எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 18ஆம் திகதியில் இருந்து 28ஆம் திகதிவரை பரீட்சை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டி ருந்த நிலையில், இது தொடர்பில் மறு ஆய்வு செய்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தற்போது கல்வி அமைச்சு அறிவித் துள்ளது. தரம் 11 மாணவர்களின் பாடத்திட்டங் கள் இன்னமும் நிறைவு செய்யப்படாதுள்ள தால் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கருத் துக்களை அறிந்து நேர அட்டவணை இறுதி செய்யப்படும் என்று கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது. (எ-இ)

நினைவேந்தலை...
கொழும்பு, நவ.20
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா கரன்தான் மாவீரர் நாள் வாரத்தைப் பிரக டனப்படுத்தியிருந்தார். இந்த வாரம் (மாவீரர் வாரம்) பயங்கரவாதி களை நினைவுகூரும் வாரம். இவர்களை நினைவுகூர கடந்த நல் லாட்சி அரசு நாட்டின் சட்டத்தை மீறி அனுமதி வழங்கியது என்பதற்காக எமது இந்த ஆட்சியில் பயங் கரவாதிகளை நினைவுகூர நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம்.
இவ்வாறு ராஜபக்ச அரசின் அமைச்சரவைப் பேச்சாள ரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.
பயங்கரவாதிகளை நினைவுகூர அனுமதி கோரி தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்த முடியாது. அதற்கு அரசு தயார் நிலையிலும் இல்லை என்றும் அவர் குறிப் பிட்டார்.
மாவீரர் தின நிகழ்வுகளைத் தடையின்றி நடத்துவதற் குத் தேவைப்பட்டால் ராஜபக்ச அரசுடன் பேசுவோம் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனா திராஜா நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.
இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறி னார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பு. எமது நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பு. இந்தநிலையில், அந்த அமைப்பின் சார்பில் பலியான வர்களை எப்படி நினைவுகூர முடியும்?
நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டமும், கொரோ னாத் தனிமைப்படுத்தல் சட்டமும் நடைமுறையில் இருக்கின்றபோது பொதுவெளியில் விடுதலைப்புலி களை நினைவுகூரும் நிகழ்வுகளை நடத்தவே முடி யாது.
அதை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமை யான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் மக்கள் விரும்பினால் போரில் உயிரிழந்தவர்களை தத்தமது வீடுகளிலிருந்து நினைவுகூரலாம். அதை எம்மால் தடுத்து நிறுத்த முடியாதுஎன்றார். (எ-22)

437...
இதன்மூலம் கடந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட மினுவாங்கொட, பேலியகொட கொரோனாக் கொத்தணியில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 330 ஆக உயர்ந்துள்ளது.
நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்றுவரை 18 ஆயி ரத்து 841 பேர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி யுள்ளனர்.
அவர்களில் 12 ஆயிரத்து 903 பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். 73பேர் தொற்றால் இறந்துள்ளனர். (எ-22)

கொரோனா...
இரவு தகவல் வெளியானது.
இதன்மூலம் நாட் டில் கொரோனாத் தொற்றால் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை 73 ஆக அதிகரித் துள்ளது.
மினுவாங்கொட பேலியகொட கொரோனா பர வல் கொத்த ணியை அடுத்து கடந்த 6 வாரங்க ளில் 60 பேர் உயிரிழந்துள்ள னர்.
நாட்டில் ஜனவரி மாதம் முதல் இது வரை 18 ஆயி ரத்து 308 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள் ளாகியுள்ளனர். (எ-22)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 31 . 12 . 1959
உதிர்வு 20 . 11 . 2019

அமரர்
### திருமதி சிவநேசம் நிர்மலன்
திதி : கார்த்திகை தேய்பிறை அட்டமி ( 08.12.2020)

இவ் உலகத்தில் உணவுப் பஞ்சம்
ஏற்பட்டிருந்தாலும் எனக்கு உணவு
சமைத்து கொண்டு வந்திருப்பாயே அம்மா
உன்னைப் போல் அன்பு செலுத்த
இவ்வுலகில் எனக்கு எவருமே இல்லையே அம்மா
தனி ஒருவனாய் உன் மகன் அம்மா. ......

இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 12 . 1975
இறப்பு 19 . 11 . 2020

### திருமதி பவானி-மகிந்தன்
அரியாலை பொன்னம்பலம் வீதியைச் சேர்ந்த திருமதி பவானி மகிந்தன் நேற்று (19.11.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னார் மகிந்தனின் அன்பு மனைவியும், அரியாலை பொன்னம் பலம் வீதியைச் சேர்ந்த திரு.கனகசபாபதி-பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், பவிதரன், நகுலன், லதாப்பிரியா, பிரியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயந்தி, ஜெயந்தன், ரோகினி, முகுந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2020) வெள்ளிக் கிழமை பி.ப 3.00 மணியளவில் 200/2, கண்டி வீதி (ஸ்ரீபார்வதி வித்தியாசாலை முன்பாக) அரியாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 05 . 02 . 1943
மறைவு 13 . 12 . 2018

அமரர்
### முருகுப்பிள்ளை கதிர்காமநாதன்

கனவுகள் எங்களுக்கு பிடித்திருக்கிறது
நீங்கள் வந்து அதற்கு அழகு சேர்ப்பதால்
கண்ணீரும் எங்களுக்கு பிடிக்கிறது
உங்களுக்காய் அது உதிர்வதால்
தனிமை எங்களுக்கு பிடிக்கிறது
உங்கள் நீங்கா நினைவுகளோடு வாழ்வதால்.

அன்புடன்
மனைவி - கிருஷ்ணா
பிள்ளைகள்: இராஜசுதர்சன் குடும்பம்
துஷ்யந்தி உதயகுமார் குடும்பம்
அகல்யா சுதர்சன் குடும்பம்
பிருதிவிராஜ் குடும்பம்

## ஜப்பான் மேசைப்பந்து தொடரில் தமிழக வீரர்

சென்னை, நவ.20
ஜப்பானிலுள்ள ஒகியாமாவில் நடைபெறவுள்ள லீக் மேசைப் பந்துத் தொடரில் சென்னையைச் சேர்ந்த சத்யன் விளையாட வுள்ளார். இவர் இந்தியாவின் முன்னணி மேசைப் பந்து வீரர்களில் ஒருவராவர்.
தமிழகத்தைச் சேர்ந்த இவர் இந்திய அளவில் தரவரிசையில் 32 ஆவது இடத்தில் உள்ளார்.
இந்த நிலையில் இந்த லீக் தொடரில் இவர் விளையாடவுள்ளார். இதற்காக எதிர்வரும் 23 ஆம் திகதி ஜப்பான் புறப்பட்டுச் செல்கிறார்.
இவர் தனது கழகத்துக்காக 8 ஆட்டங்களில் விளையாடவுள்ளார். முதல் போட்டி டிசம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.
இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது,
நான் மிகவும் உற்சாகமாக இருக்கிறேன். இந்தப் போட்டியில் ஜப்பான், கொரியாவைச் சேர்ந்த முன்னணிமேசைப்பந்து வீரர்கள் பங்கேற்பார்கள்.
என்னால் சில வீரர்களைத் தோற்கடித்து அதிர்ச்சி அளிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறதுஎன்றார். (ற-இ)

# பிரேசில், ஆர்ஜென்டினா தகுதிச் சுற்றில் வெற்றி

லண்டன், நவ.20
உலகக் கிண்ணக் கால்பந்துத் தகுதிச் சுற்று ஆட்டங்களில் பிரேஸில், ஆர்ஜென்டினா அணிகள் வெற்றி பெற்றன.
22 ஆவது உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடர் கட்டாரில் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளது.
இதற்கான தென்அமெரிக்க கண்டத்துக்குரிய அணிகளுக்கான தகுதிச் சுற்றுப் போட்டி பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகிறது.
இதில் பங்கேற்றுள்ள 10 அணிகளும் தங்களுக்குள் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறவுள்ளன. 5 ஆவது இடம் பிடிக்கும் அணி 'பிளேஓவ்' சுற்று மூலம் வாய்ப்பைப் பெறமுடியும்.
இந்த நிலையில் உருகுவே தலைநகர் மோன்ட்வீடியோவில் நேற்று நடந்த தகுதிச் சுற்று ஆட்டம் ஒன்றில் 5 முறை சம்பியனான பிரேஸில் அணி, 2 தடவை சம்பியனான உருகுவேயை எதிர்கொண்டது. முதல் பாதியில் பிரேஸில் அணி 20 என்ற கோல் கணக்கில் முன்னிலை



வகித்தது.
உருகுவே அணியால் கடைசி வரை பதில் கோல் எதுவும் திருப்ப முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் பிரேசில் அணி 20 என்ற கோல் கணக்கில் உருகுவேயை வீழ்த்தி வெற்றிபெற்றது. 4 ஆவது ஆட்டத்தில் ஆடிய பிரேஸில் அணி தொடர்ந்து 4 வெற்றிகளைக் குவித்து புள்ளிப் பட்டியலில் 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.
மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான ஆர்ஜென்டினா அணி, பெருவை அதன் சொந்த மண்ணில் சந்தித்தது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் லயோனல் மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்டினா 20 என்ற கோல் கணக்கில் பெருவைச் சாய்த்தது.
2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் ஆர்ஜென்டினா அணி, பெருவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது இதுவே முதல்முறையாகும்.
4 ஆவது ஆட்டத்தில் ஆடிய ஆர்ஜென்டினா அணி 3 வெற்றிகள், ஒரு சமநிலையுடன் 10 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் இருக்கிறது. (ற-இ)

## தப்பிக்க முயன்ற கைதிகளில் 2 பேருக்குக் கொரோனா உறுதி

### ஒருவர் சூட்டில் உயிரிழப்பு

கொழும்பு, நவ.20
கண்டி, போகம்பறை சிறைச்சாலையிலிருந்து தப்பிக்க முயன்ற கைதிகளில் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
போகம்பறை சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கைதிகளில் ஐவர் நேற்றுமுன்தினம் அதிகாலையில் தப்பிச் செல்ல முயற்சித்திருந்தனர். இவ்வாறு தப்பிச் சென்ற கைதிகள் மீது சிறைச்சாலைப் பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். ஒருவர் தப்பியோடினார். இந்தநிலையில் தப்பியோடிய கைதியும் கண்டி நகரில் வைத்து நேற்றுமுன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டிருந்தார். இதையடுத்து தப்பிக்க முயன்ற 4 கைதிகளுக்கும், துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த கைதிக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. சிறையிலிருந்து தப்பித்துச் செல்ல முற்பட்ட கைதி ஒருவருக்கும், துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த கைதிக்குமே கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எ-22)

# இணக்கப்பாட்டை மீறிய ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், நவ. 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கும் இடையிலான இணக்கப்பாட்டை மீறும் வகையில், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் நேற்று செயற்பட்டுள்ளார்.
நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் சபையை பிரதிநிதித்துவப்படுத்திய ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர், அதற்கு எதிராக வாக்களித்தார். சபையின் வரவு செலவுத் திட்டம் தோல்வியடைந்தது.
ஈ.பி.ஆர்.எல்.எவ். வசமுள்ள வவுனியா நகர சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கினால், தமிழ்க் கூட்டமைப்பு வசமுள்ள ஏனைய சபைகளுக்கு அந்தக் கட்சி ஆதரவு வழங்கும் என்ற இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.; அதற்கு அமைவாக தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் ஆதரவு வழங்கினர்.
வவுனியா நகர சபையின் வரவு செலவுத் திட்ட அமர்வு நேற்றுக்காலை இடம்பெற்றது. இதன்போது கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதரவுடன் வரவு -செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.
ஆனால் நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி. ஆர்.எல்.எவ். உறுப்பினர் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தார். (ஒ.5)

பௌதீகவியல்
T.K.KAJAN B.Sc
0776531177

## பொலிஸ் கொத்தணி "கிடு கிடு"

கொழும்பு, நவ.20
இலங்கையில் மேலும் 8 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்தாவது:
அவர்களுள் 6 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள்.
கொரோனாத் தொற்றுக்குள்ளான பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட படை அதிகாரிகளின் மொத்த எண்ணிக்கை 833 ஆக அதிகரித்துள்ளது.
அவர்களுள் 630 பொலிஸ் அதிகாரிகளும், 203 பொலிஸ் விசேட படை அதிகாரிகளும் அடங்குகின்றனர் என்றார். (எ-22)

காணி தேவை
யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 076 2212 037

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமை நவாலி மெயின் றோட்டுடன் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. (ஆனைக்கோட்டை சந்தியிலிருந்து 70 மீற்றர் தூரம்). தரகர் தேவையில்லை.
தொடர்பு:
077 6234 204, 077 2880 152



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.